5

பூட்டை உடையுங்கள்!

பாரததேவி ஆசிரியர்

என். ராமரத்னம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 APR 1944
MADRAS

தமிழ்ப்பண்ணை

பங்கஜா மில்ஸ் லிமிடெட்.

1932-A ரிஜிஸ்டர் செய்யப்பெற்றது.

ரிஜிஸ்டர் ஆபீஸ் :— கோயமுத்தூர்.

● கோயமுத்தூரில் பேர்பெற்ற மில்களின் வரிசையில் சேர்ந்த இம்மில் தக்க அநுபவஸ்தர்களால் நிர்வகிக்கப்பெற்று வருகிறது

● ஸ்பின்னிங் 80-நெ. வரை ரிங்கு நூல் மற்றும் இதே இனத்தில் டப்பளிங்கும் தயாரிக்கப்படுகிறது. வருடந்தோறும் பங்குதார்கட்கு நல்லவட்டி தரப்பட்டுவந்துள்ளது.

● இந்திய முதல், இந்திய தொழிலாளர், இந்திய நிர்வாகம், ஆக எல்லாம் இந்தியமயமாக நடைபெற்றுவருகின்ற தேசீய தொழில் ஸ்தாபனமாகும்.

ஆதலால் இந்த மில்லின் நூலையே வாங்கி ஆதரியுங்கள்.

Managing Agents & Secretaries :

C. S. Ratnasabapathy Mudaliar & Sons

COIMBATORE

320.158

அன்னியர்க் கிடங் கொடோம்
அரசையார்க்கும் இனி விடோம்
மன்ன ராகி ஆளுவோம்
மானிலத்தில் வாழுவோம்.

நாமக்கல் கவிஞர்.

660

நிருவாக ஆசிரியர்கள் :—
நா. அண்ணாமலை.
எஸ். ஏ. ரஹீம்.

PREMIER

தியாகராயநகர் - சென்னை

V44:551

"காந்திஜி நிரபராதி"

கும்பகோணம் எஸ். ஏ. ரஹீம்

அவர்கள் எழுதிய புத்தகம்

விரைவில் வெளிவரும்.

தற்காலப் பிரச்னைச் சுடர் 6

பூட்டை உடையுங்கள்

என். ராமரத்னம்

விலை அணா 8.

முதற் பதிப்பு : பிப்ரவரி 1944

சகல உரிமைகளும்
தமிழ்ப் பண்ணையாருக்கே.

அடுத்த தற்காலப் பிரச்னை சுடரை
தியாகி ராம. சடகோபன் அவர்கள்
எழுதுகிறார்கள்.

ஹிந்தி பிரசார பிரஸ்,
தியாகராயநகர், சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 APR 1944
MADRAS

பூட்டை உடையுங்கள்

தேசத்தின் தலைவர்கள் இன்று சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டிருப்பது பல காரியங்களுக்குச் சௌகரியமாக இருக்கிறது. பொது மக்களின் கோரிக்கைகளையும், தேவைகளையும் எடுத்துக்காட்டி பிராணனை வாங்கிக் கொண்டிருந்த காங்கிரஸை ஒரு வழியாகத் தொலைத்து விட்டோம் என்று அதிகார வர்க்கம் அற்ப சந்தோஷத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறது. காங்கிரஸை 'கோதா'விலிருந்து விரட்டி விட்டதால் வெள்ளைக்கார எஜமானர்கள் இந்தியாவில் அதிக தொந்தரவு எதுவுமில்லாமல் தங்கள் காரியத்தை நடத்திக் கொண்டு போக முடிகிறது. தொந்தரவு கொடுப்பவர்கள் இன்னும் இருந்து கொண்டுதானிருக்கிறார்கள். ஆனால், அந்தத் தொந்தரவுகளின் தன்மை என்னவென்பது நமது அரசியல் 'ஆண்டை'களுக்கு நன்றாகத் தெரியும். பாகிஸ்தான் கொடுக்காவிட்டால் இந்தியாவில் ரணகளம் ஏற்படும் என்று ஜின்னா பயமுறுத்துவதைக் கண்டு பிரிட்டிஷார் பயப்படுவதில்லை. திராவிடஸ்தான் கிடைக்காவிட்டால் தாடியைக் கொளுத்திக் கொண்டு விடுவேன் என்று இன்னொருவர் கதறுகிறார். அதை அவர்கள்

சட்டை செய்வது கூட இல்லை. ஏன்? இதெல்லாம் சுயநலக் கும்பல்களின் பதவி வேட்டைக் கூச்சல் என்பதை பிரிட்டிஷார் நன்ருக அறிந்திருக்கிருர்கள்.

'ஒன்றும் கிடையாது' என்று பிரிட்டிஷார் சொல்லிவிட்டால் இவர்கள் மலையைப் புரட்டி விடப் போவதில்லை. ஆனுல், வெள்ளைக்காரர்கள் நல்ல ராஜதந்திரிகளாதலால் அம்மாதிரி சொல்லுவதில்லை. இந்த வகுப்புவாத ஸ்தாபனங்கள் இந்தியாவுக்கு விடுதலை வேண்டுமென்று கேட்பதில்லை. உத்யோகத்தில் பங்கு கொடுத்தால் அவர்களுக்குப் போதும். நாட்டின் நிர்வாகத்தில் சம உரிமை வேண்டுமென்று முஸ்லீம் லீக் கூச்சல் போடுகிறது. உத்யோகங்களில் எங்கள் வகுப்புக்கு இத்தனை சத விகிதம் கொடுக்க வேண்டுமென்று இன்னெருவர் கேட்கிருர். இது பிரமாத விஷயமில்லை. ஆகையால், குலைக்கும் நாய்க்கு எலும்புத்துண்டை எறிவதுபோல் நம் எஜமானர்கள் அவ்வப்போது இக் கோரிக்கைகளைத் திருப்தி செய்யத் தயங்குவதில்லை. வைஸ்ராய் நிர்வாக சபையில் இரண்டு ஸ்தானங்கள், மாகாணங்களில் சில பெரிய பதவிகள், ஜில்லாக்களில் சில உத்யோகங்கள் என்று சற்று தாராளமாக விநியோகம் செய்தால் இந்தக் கூச்சல்களெல்லாம் இருந்த இடம் தெரியாமல் அடங்கிப் போய்விடுகின்றன. வகுப்புகளின் சார்பாகக் கூச்சல்கள் அதிகமாவது அரசியல் ஆண்டைகளுக்கு என்றுமே நல்லதுதான். வெள்ளைக்காரர்களிடம் இவர்களுக்கு ஒரு

660

சண்டையும் இல்லை. இந்நாட்டில் பிறந்து வளர்ந்தவர்கள் அதிக செல்வாக்குடன் இருக்கக் கூடாதென்றுதான் அவர்கள் விரும்புகிறார்கள். இந்தியாவின் 11 மாகாணங்களிலும் நேரே சீமையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஆங்கிலேயர்கள் கவர்னர்களாயிருக்கலாம். இந்தியா பூராவையும் ஓர் ஆங்கிலேய வைஸ்ராய் ஆளலாம். இந்திய சேனாதிபதி ஆங்கிலேயராயிருக்கலாம். இதெல்லாம் அவர்களுக்குக் கவலையில்லை. ஆனால், இந்தியர்கள் விஷயத்தில் மட்டும் விகிதாசாரம் கண்டிப்பாய் இருக்கவேண்டும். தங்களுடைய ஏகபோக உரிமைகளுக்கு ஆபத்து இல்லாத வரையில், இந்தியர்கள் தம் விரல்களால் தம் கண்களையே குத்திக்கொள்வதைப் பற்றி பிரிட்டிஷாருக்கு என்ன ஆட்சேபனை இருக்க முடியும்? பிச்சைக்காரனுக்கு தம்பிடிக் காசு எறிவதுபோல் பிரிட்டன் இந்தப் பதவிகளைக் கொடுத்து அவர்களைத் தம்முடைய தாசர்களாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

வேறு சிலருக்குப் பட்டங்களையும், கௌரவங்களையும் அளித்துத் தம் வசப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவசியம் நேரும் போதெல்லாம் இவர்கள் மாலைகளைத் தொடுத்துக் கொண்டு வந்து, நம்ஆண்டைகளின் கழுத்தில் மாலையைப் போட்டு, அவர்களை ஊர்வலமாக அழைத்துவரத் தயாராயிருக்கிறார்கள்.

ஆகவே, அதிகாரவர்க்கத்தினிடம் சில்லரை தயவுகளை எதிர் பார்த்துக் கொண்டிருக்கும்

இந்த கோஷ்டியினரைக் கண்டு பிரிட்டிஷார் பயப்படவேண்டிய அவசியமே இல்லே. காங்கிரஸ் ஒன்றுதான் அவர்களே உண்மையிலேயே ஆட்டிவைத்துக் கொண்டிருக்கும் ஸ்தாபனம். நிர்வாகசபை மெம்பர்கள் பதவிகளேயோ, கவர்னர் பதவிகளேயோ காங்கிரஸ் கேட்கவில்லே. காங்கிரஸ் கேட்பது ரொம்ப பெரிய விஷயமாயிருக்கிறது. சுயராஜ்யம் வேண்டுமென்று அவர்கள் கேட்கிறுர்கள். சாதாரண காலத்திலேயே 'உழக்குப் பால்' கறக்கக் கூடிய பிரிட்டிஷ் மாடு இந்த யுத்த காலத்தில் இதற்குச் சம்மதிக்க முடியுமா? தேசபக்தி காரணமாகத் தங்கள் நாட்டுக்கு விடுதலே வேண்டுமென்று கேட்டவர்கள் பிரஷ்டர்களாக்கப்பட்டு விட்டார்கள்.

காங்கிரஸ் சட்ட விரோதமான ஸ்தாபனமென்று அறிவிக்கப் பட்டவுடன் இந்திய சுற்றுணர்ச்சியே மாறி விடுகிறது. 'அரசியல் பிரச்னே' என்று புதிதாக ஒன்று முளேத்து விடுகிறது. பிரச்னே தோன்றியவுடன் அதற்கு விமோசன வழிகளும் கிளம்ப ஆரம்பித்து விடுகின்றன.

பொதுஜன நலனேக்கருதி காங்கிரஸ் இவ்வளவு காலமாகச் சேவை செய்து வந்திருக்கிறது. பட்டம் பதவிகளேத் துச்சமாக நினேத்துத் தியாகம் செய்வதை மேலானதாகக் கருதி நடந்து வந்திருக்கிறது. மக்களுக்காக உண்மையுடன் உழைக்கும் ஒரு ஸ்தாபனம் இருக்கிறதென்ருல் அது காங்கிரஸ் ஒன்று தான்.

பொது ஜன மதிப்பிற்குரிய காங்கிரஸ் ஸ்தாபனம் சட்டவிரோதமானதென்று அறிவிக்கப்பட்ட பொழுதும் காங்கிரஸ் தலைவர்கள் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்ட பொழுதும் ஜனங்களிடையே ஆத்திரம் எழத்தான் செய்தது. அதன் பலனுகவே கலவரங்கள் நாட்டில் ஏற்பட ஆரம்பித்தன. கலவரங்கள் ஏற்பட்டதில் ஆச்சரிய மெதுவுமில்லை. உள்ளம் கொதித்த மக்கள் இன்னது செய்வதென்றறியாமல் தங்கள் மனதிற்குத் தோன்றிய வழிகளில் நடக்கலானுர்கள். இந்தக் கலவரங்களைச் செய்ய வழி கற்பித்தவர் அமெரி என்று கூடச் சொல்லலாம். அவர் காமன்ஸ் சபையில் சதிச் செயல்களைப் பற்றி ஒரு ஜாபிதா ஜோடித்து, "இவைகளெல்லாம் இந்தியாவில் நடக்கின்றன" என்று கூறினுர்.

இப்பொழுது காங்கிரஸ் தலைவர்கள் சிறையிலேயே அடைபட்டுக் கிடக்கின்றனர். இவர்களை விடுதலை செய்யவேண்டு மென்கிற எண்ணம் சிறிதளவுகூட அதிகார வர்க்கத்திற்கு இருப்பதாகத் தெரியவில்லை. பொதுஜன நலனைக் கருதி சேவை செய்த தலைவர்கள் சிறைப்பட்டது ஜனங்களுக்கு ஒரு கை ஒடிந்து போனது போலவே இருக்கிறது. என்ன செய்வது; எந்த மார்க்கத்தைக் கடைபிடிப்பது; இதைச் செய்வதா வேண்டாமா? என்று ஒன்றும் தெரியாமல் திண்டாடித் தவிக்கின்றனர். இவர்களுக்குச் சரியான வழி காட்டி நேர் பாதையில் கொண்டு செல்பவர்கள் இல்லை.

ஆனால், அவர்களைக் குழப்பத்தில் தள்ளிவிட ஏராளமான பிரத்யட்ச வாதிகள் இருக்கிறார்கள்.

தலைவர்கள் இல்லாத சமயத்தில் பத்திரிகைகள் அக்காரியத்தைச் செய்யலாமே என்று கேட்கலாம். வாஸ்தவம். பத்திரிகைகளின் பொறுப்பு மகத்தானது தான். ஆனால், அவ்வளவு தூரம் சேவை செய்யப் பத்திரிகைகள் சுதந்திரம் பெற்றிருக்கவில்லை. ஆகையினால் தான் சுதந்திரம் பெறும் வரையில் பத்திரிகைகளை நடத்தியும் பிரயோஜனமில்லை என்று காந்திஜி கூறியிருக்கிறார்.

உள்ள சுதந்திரத்தைப் பூரா அளவுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்கும் பத்திரிகைகள் தயாராயில்லை. அதற்குக் காரணம் மற்ற தொழில்களைப்போல் பத்திரிகைகளும் ஒரு தொழிலாக நடத்தப் படுவதுதான். மகாத்மாவின் ஆணைப்படி இந்தியாவில் பல பத்திரிகைகள் நிறுத்தப்பட்டன. மூன்று மாதங்களுக்கு இந்த 'நிறுத்தல் வைபவம்' இருந்தது. இந்தக் காலத்தில் பத்திரிகை முதலாளிகள் முள்மேல் இருப்பது போல் இருந்தார்கள். ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி பத்திரிகைகளைத் திரும்பவும் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் மீது குற்றம் சொல்வதில் பிரயோசனமில்லை. லட்சக் கணக்கில் அவர்கள் முதல் போட்டிருப்பது அந்தத் தொழிலில் லாபம் சம்பாதிப்பதற்கே யொழிய, கிழட்டு காந்தியின்

பேச்சைக் கேட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொள்வதற்கல்ல.

பம்பாயில் கூடிய அகில இந்தியப் பத்திரிகாசிரியர்கள் மகா நாட்டில் ஏதோ ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. சர்க்காரும் அதை ஒப்புக் கொண்டார்கள். உடனே ஏதோ பெரிய வெற்றி கிடைத்து விட்டது போல் பெரும்பாலான பத்திரிகைகள் மேள தாளத்துடன் ஆரம்பிக்கப் பட்டுவிட்டன. பத்திரிகைகளுக்கு ஏராளமான செல்வாக்கு இருப்பது உண்மையே—ஆனல், அச் செல்வாக்கை உபயோகிக்க அவர்கள் தயாராயில்லை. வியாபார நலன்கள் குறுக்கிடுவதால் அவர்கள் தம் கடமையைச் சரிவர செய்ய முடியவில்லை. சட்டத்திற்கு உட்பட்டு ஆபத்து எதுவும் இல்லாமல் தேசீயம் பேச முடிந்தால் அதற்குத் தயாரா யிருக்கிருர்கள். அதைத் தாண்டிப் போக அவர்கள் விரும்பவில்லை. ஆகவே, பத்திரிகைகளின் மூலம் இந்த நெருக்கடியைத் தீர்க்க வழிகண்டு பிடிக்க முடியுமென்று நினைப்பது அவ்வளவு புத்திசாலித் தனமாகாது. யுத்த முயற்சியை ஆதரிப்பதிலிருந்து, வைஸ்ராய்க்கு சலாம் போடுவது வரையில் எல்லாக் காரியங்களுக்கும் பத்திரிகைகள் தயராயிருக்கின்றன. ஒன்றிரண்டு பத்திரிகைகள் இதற்கு விலக்காயிருக்கலாம். ஆனல், பொதுவாக இன்று இந்தியப் பத்திரிகைகளின் நிலைமை விக்ரமாதித்தனிடம் வேதாளம் கைகட்டி வாய்பொத்தி நின்றதுபோல் தான் இருக்கிறது. சுய நலத்தை முன்னிட்டு பத்தி

ரிகைகள் எவ்வளவு அவமானமான நிபந்தனை களுக்கு உட்பட்டு நடந்து வருகின்றன வென்பது இப்போது வெளியே தெரியாது; தெரிவதற்கும் வழியில்லை. ஆனால், பிற்காலத்தில் இதைப் பற்றிய உண்மைகள் வெளிவரும்போது பிறர் நம்ப மாட்டார்கள். இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் பத்திரிகைகள் காட்டும் தேச பக்தியைப் பார்த்தாவது இந்தியப் பத்திரிகைகள் தம் கடமையை உணர்ந்திருக்கலாம். ஆனால், நடப்பது அதற்கு நேர் மாருக இருக்கிறது. அவர்களுடன் சேர்ந்து குலாவும் அந்த மகத்தான பாக்கியத்திற்காக இந்தியப் பத்திரிகைகள் அவர்களுக்குத் துணையாக ஒத்து ஊதிக் கொண்டிருக்கின்றன.

நெருக்கடி எப்படியாவது தீர வேண்டும். பூட்டை உடைத்துத் தலைவர்களை எவ்விதத்திலாவது விடுதலை செய்யவேண்டும்—இதுதான் ஒவ்வொருவருடைய மனதிலுமுள்ள அவா. மிதவாதிகள் முதல் சில காங்கிரஸ்காரர்கள் வரை இதற்கு ஏதாவது வழி சொல்லிக் கொண்டே யிருக்கிருர்கள். இவர்கள் வெளியிடும் குறுக்கு வழிகள் எத்தகையவை; அவைகள் எப்படி பிரயோஜன மற்றவை என்பதை பின்னர் கவனிப்போம்.

தலைவர்களை விடுதலை செய்வதென்கிற விஷயத்திற்கு சர்க்கார் செவிசாய்க்கப் போவதில்லை என்பது திட்டமாகத் தெரிந்துவிட்டது. சிறையிலுள்ள தலைவர்கள் வெளியே வந்தால் சுதந்திரப் பல்லவியையே தான் பாடிக்கொண்டிருப்

பார்கள் என்பதை ஆளும் வர்க்கத்தினர் அறிந்தே இருக்கின்றனர். தாங்கள் தலைவர்களைச் சிறையி லிட்டதை நியாயம் என்று உலகின் கண்முன் நிரூபிக்க அவர்கள் 'கெப்பல்ஸ்' பிரசாரம் செய்து வருகின்றனர். காந்திஜீமீதும், காங்கிரஸ் மீதும் அபாண்டமான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி யிருக்கின்றனர். 'காங்கிரஸ் ஜப்பானியரை ஆதரிக் கிறது; ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற கல வரங்களுக் கெல்லாம் காங்கிரஸே ஜவாப்தாரி' இந்த இரண்டு காரணங்களைத்தான் சர்க்கார் கூறி வந்திருக்கின்றனர். இவைகள் எவ்வளவு அநியாயமான பொய்மூட்டை என்பது இப் பொழுது வெட்ட வெளிச்சமாகி விட்டது. சர்க்காரின் இந்த பொய்க் குற்றச்சாட்டை ஸ்ரீமதி சரோஜினி நாயுடு உடைத்தெறிந்து நிலை மையைத் தெளிவாக்கிவிட்டார்.

ஆக்ரமித்து படையெடுக்க முயலும் எந்த அந்நியரையும் காங்கிரஸ் எதிர்க்கும் என்றும், ஜப்பானியர்களை ஆதிமுதற்கொண்டே காங்கிரஸ் எதிரியாகக் கருதிவந்திருக்கிற தென்றும் ஸ்ரீமதி சரோஜினி தெளிவு படுத்தியிருக்கிறார். படை யெடுத்து வருபவர்களிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டு மென்ற கேள்வி யொன்றுக்கு காந்திஜி பதிலளிக்கையில் படையெடுத்து வரும் எதிரியுடன் எவ்விதமான தொடர்பும் உறவும் கூடாது என்று கண்டிப்பாகக் கூறியிருக்கிறார். காங்கிரஸின் மனப்பான்மை சரியானது தானா, இல்லையா வென்று வெள்ளைக்காரர்களிடம்

'சர்டிபிகேட்' வாங்க வேண்டிய அவசியமில்லை. ஜப்பானை ஆதரிப்பது நியாயம் என்று மகாத்மா கருதியிருந்தால், ஜப்பானியரைப் போலவே இன்னொரு அந்நிய நாட்டினராகிய வெள்ளைக்காரர்களின் சட்டத்துக்கு பயந்து கொண்டு அதை மறைத்து வைத்திருக்கமாட்டார்.

"வீடு பற்றி எரிகிறது. இந்த சமயத்தில் நீ வெளியே போனால் இருவருக்கும் நல்லது" என்று எந்த தைரியத்துடன் மகாத்மா சொன்னாரோ அதே தைரியத்தை எல்லா விஷயங்களிலும் காட்ட அவர் தயங்கமாட்டார். காக்கை கறுப்பு என்று சொல்லுவது தான் மகாத்மாவுக்குத் தெரிந்த ராஜதந்திரம். உலகத்தில் அக்ரமம் நடப்பதை அனுமதிக்கமாட்டோம் என்று வீராப்புப் பேசிக்கொண்டே, அதே நிமிஷத்தில் செக்கோஸ்லவேகியாவை பூர்ண கும்பத்துடன் ஹிட்லருக்குப் பரிசாக அளிக்கும் ராஜதந்திரம் காந்திஜிக்குத் தெரியாது. தன்னந்தனியாக நின்று கொண்டு ஜப்பானியரை எதிர்த்துக் கொண்டிருந்த வீரச் சீனர்களை காட்டிக் கொடுத்து தற்காலிகமாக பர்மா பாதையையே மூடினார்களே, அந்த ராஜதந்திரம் மகாத்மாவுக்குத் தெரியாது.

பிரிட்டிஷாருக்கு ஜப்பானியர் விரோதிகள் என்பதற்காக காந்திஜி ஜப்பானை எதிர்க்கவில்லை. அத்தகைய எதிர்ப்பு மக்களின் உண்மையான எதிர்ப்பாயிராது. கூலிகளின் எதிர்ப்புதான் இது. காசு கொடுத்தால் எந்த ஈனத்தொழிலையும் செய்

வதற்கு எல்லா நாடுகளிலும் ஆட்கள் இருக்கிறார்கள். அதைப்போல் இந்தியாவிலும் இருக்கிறார்கள். இன்று ஜப்பானியருக் கெதிராக நிறுத்தப்படும் இந்திய சைன்யம் நாளைக்கு கூலி கொடுக்கும் எஜமான் விரும்பினால் 'ஜப்பானுக்கு ஜே' போடத்தயாராயிருக்கும். பணக்காரன் சொல்லுவதற் கெல்லாம் தலையாட்டித்திரியும் கயவர்களைப் போல் தான் இந்தக் கூலிக்காரர்களும்.

மகாத்மாவின் எதிர்ப்பு அம்மாதிரி தன்மை வாய்ந்ததல்ல. அந்நியர் யாராயிருந்தாலும் நாம் எதிர்க்கிறோம். ஏற்கனவே உள்ள பிரிட்டிஷாரும் வேண்டாம். புதிதாக வரும் ஜப்பானியரும் வேண்டாம். சீனர்கள் வந்தாலும் வேண்டாம்; உலகத்தை ரட்சிக்கப் புறப்பட்டிருக்கும் புதிய ஏகாதிபத்யமாகிய ரஷ்யா வந்தாலும் வேண்டாம். வெளியே இருந்து வரும் சனியன்கள் ஒன்றுமே நமக்குவேண்டாம். சரியோ, தவறோ எங்கள் ஆட்சிதான் எங்களுக்கு உயர்வு என்று காந்திஜி சொல்லுகிறார்.

இரண்டாவது குற்றச் சாட்டாகிய 'கலவரங்களுக்கு காங்கிரஸே ஜவாப்தாரி' என்பதும் தகர்த்தெறியப் பட்டு விட்டது. இயக்கமே ஆரம்பிக்காத பொழுது இக்கலவரங்களை இயக்கத்தின் ஒரு பகுதி என்று எப்படிச் சொல்லமுடியும்? காந்திஜியே இந்த பலாத்காரச் செய்கைகளைக் கண்டித்து வைஸ்ராய்க்கு எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டிருக்கிறார். அதை சர்க்கார்

இன்னும் வெளியிடவில்லை. சர்க்கார் தாங்கள் சாட்டும் குற்றங்களுக்கு தக்க நியாயங்களை எடுத்துக் காட்டுவதென்பது முடியாது. தாங்கள் கூறுவது உண்மை என்ற தைரியம் சர்க்காருக்கு இருந்தால் பேடிகள் மாதிரி நடந்து கொண்டு தலைவர்களை விசாரணையின்றி ஏன் சிறையில் வைத்திருக்க வேண்டும்? விசாரணைக்குக் கொண்டுவந்து காங்கிரஸ் செய்தது குற்றம் என்று உலகத்திற்கு நிரூபிப்பதற்கென்ன?

ஒவ்வொரு சம்பவங்களும் நடைபெற நடைபெற காங்கிரஸ் வலுவடைந்து கொண்டே வருகிறது. சர்க்கார் கட்சி பலஹீனமடைந்தே வருகிறது.

தலைவர்கள் சிறைப்பட்டதற்கு முக்யமான காரணம் ஆகஸ்ட் தீர்மானம் தான். தீர்மானம் நிறைவேறிய மறுநாளே பொழுது விடிந்ததும் விடியாததுமாக காந்திஜி, ராஷ்டிரபதி ஆஸாத், நேரு முதலிய தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களைத் தொடர்ந்து மற்ற தலைவர்களும் சிறையிலடைக்கப் பட்டனர்.

ஆகஸ்ட் தீர்மானத்தைக் கண்டு அதிகார வர்க்கத்தினர் அவ்வளவு தூரம் தொடை நடுங்கியிருக்க வேண்டியதில்லை. பொதுஜன இயக்கம் ஆரம்பிக்கும் முன் வைஸ்ராயைச் சந்தித்துப் பேசவே காந்திஜி திட்டம் போட்டிருந்தார். அதன்படியே ஒரு கடிதம்கூட எழுத முற்பட்டார். அவர் என்ன செய்யப் போகிறார் என்பதை

பொறுமையுடன் காத்திருந்துப் பார்க்கும் நிதான மில்லாமல் பயமடைந்த அதிகார வர்க்கத்தினர் இயக்கத்தை முளையிலேயே கிள்ளி எறிந்து விடுவ தாகச் சொல்லிக் கொண்டு தலைவர்களைச் சிறைப்படுத்தினர்.

காங்கிரஸின் திட்ட மென்ன வென்பது அறி விக்கப் படவில்லை. கிரிப்ஸ் தூது முறிந்ததி லிருந்து ஜனங்கள் மிகுந்த ஆத்திரமடைந்தார் கள். பிரிட்டிஷார் வேண்டு மென்றே இந்தி யாவை இப்படி ஏமாற்றியது மக்களிடையே ஒரு கொதிப்பை ஏற்படுத்தியிருந்தது. ஒரு காரணமு மில்லாமல் தங்கள் பிரதிநிதிகள் கைது செய்யப் பட்டு விட்டார்களென்ற செய்தியைக் கேட்ட வுடன் இவ்வளவு நாட்களாகக் குமுறிக் கொண் டிருந்த அவர்களுடைய உணர்ச்சி கட்டுக் கடங் காமல் போய்விட்டது. என்ன செய்கிறோ மென்று தெரியாமல் அர்த்த மில்லாத சில பலாத் காரச் செயல்களில் இறங்கினார்கள்.

“காங்கிரஸின் திட்டம் இது அல்ல. நீங்கள் போகும் பாதை தவறு” என்று அவாகளுக்கு எடுத்துச் சொல்ல யார் இருந்தார்கள்? காங்கிரஸ் மீது அந்தப் பழியைச் சுமத்துவதற்கு குடல் தெறிக்க ஓடிவந்த சர்க்கார், அதை மறுப்பதற்கு காங்கிரஸுக்கு சந்தர்ப்பம் கொடுத்தார்களா? இந்தக் கலவரங்கள் ஆரம்பமான உடனுவது தலை வர்களை வெளியே விட்டிருந்தால் ஒரே நாளில் இதெல்லாம் நின்றிராதா?

"இந்த பலாத்கார முறைகளை நாங்கள் ஆதரிக்கவில்லை. காங்கிரஸின் நிலைமை தேசத்துக்கு நன்றாகத் தெரியும்" "என்று சொல்லுவதற்கு தலைவர்களுக்கு அவகாசம் அளிக்கப்பட்டிருந்தால் இந்த சேதம் ஒரு நாளும் ஏற்பட்டிராது. ஆனால், இதை அவ்வளவு சுலபமாகத் தீர்த்துவிட சிம்லா தெய்வங்கள் விரும்பவில்லை. ஏதோ பிரமாதமாக நடந்துவிட்டது போலவும், அதைத் தாங்கள் அடக்கிவிட்டது போலவும் வெளிச்சம் போடவேண்டுமல்லவா? நியாய புத்தியுடன் நடந்து கொண்டால் அதற்கு இடம் கிடைக்காமல் போய்விடுமே!

ஆகவே, ஐரோப்பாவில் ஆரம்பிக்க முடியாத இரண்டாவது போர் முனையை இந்தியாவில் ஆரம்பித்தார்கள்.

போர் முனைகளில் செய்யமுடியாததை நிராயுதபாணிகளான ஏழை இந்திய மக்களிடம் செய்து காட்டினார்கள்.

கிழக்கே மலேயாவிலும் பர்மாவிலும் வெள்ளையரல்லாத வர்ண ஜாதியினரான ஜப்பானியரிடம் வாங்கிய அடியை, அதே கிழக்கில் உள்ள வெள்ளையரல்லாத மற்றொரு வர்ண ஜாதியினரான இந்தியர்களுக்குத் திருப்பிக் கொடுத்துத் தம் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டனர். பிரிட்டிஷ் ஈட்டி முனையின் பயத்தினால் ஜனங்கள் கோழைகளாய்ப் போயிருக்கலாம். ஆனால், அவர்களுடைய ஹிருதயத்தில் கொழுந்து விட்

டெரிந்து கொண்டிருக்கும் உணர்ச்சி அக்னி அணைந்து விடாது. நிரபராதியான காங்கிரஸ் மீது சுமத்தப்பட்ட இந்த அபாண்டத்தையும் இந்தியா ஒரு நாளும் மறக்காது.

காங்கிரஸ் ஒரே லட்சியத்திற்காக இதுவரை உழைத்து வந்திருக்கிறது. அதே லட்சியத்திற்காக எவ்வளவோ தியாகங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. தன் கட்சி நியாயமானதாக இருக்கும் பொழுது தான் செய்யாத ஒரு காரியத்திற்காக கன்னத்தில் போட்டுக் கொள்வது எதற்காக? பூரண சுயராஜ்யம் இல்லாமல் நம் கையில் அதிகாரம் இல்லாமல் காங்கிரஸ் தலைவர்கள் தான் வெளியில்வந்து என்ன காரியத்தைச் சாதிக்க முடியும்?

நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமையும் கிரிப்ஸ் தூது முடிவடைந்ததும் காங்கிரஸை ஆகஸ்ட் தீர்மானத்தை நிறைவேற்றும் படியான நிலைமையில் வைத்து விட்டது. அத்தீர்மானத்தைத் தவிர கௌரவம் வாய்ந்த எந்த தேசியக் கட்சியும் எதுவும் செய்திருக்க முடியாது.

கிரிப்ஸ் திட்டத்தை காங்கிரஸ் மட்டுமல்ல, முஸ்லிம்லீக் மற்றும் இதர கட்சி வகுப்பினரும் கூட நிராகரித்து ஒதுக்கிவிட்டனர். இதை இவர்கள் நிராகரித்த காரணங்களை வெளியிடு முன் கிரிப்ஸ் திட்டத்தைப்பற்றி ஓரளவு தெரிந்து கொள்வது அவசியமாகும். இந்திய அரசியல் சீர்திருத்தம் பற்றி கொடுக்கப்பட்டுள்ள வாக்கு

றுதிகள் நிறைவேற்றப்படுமா இல்லையா என்ற சந்தேகம் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவில் சுதந்திர ஆட்சி யாதொரு தாமதமுமின்றி ஸ்தாபிக்கபட வேண்டியதை ஸ்பஷ்டமாகவும் தெளிவாகவும் விளக்கவே பிரிட்டிஷ் மந்திரி சபை ஒரு திட்டத்தை தயாரித்து சிரித்துக் கெடுத்த கிரிப்ஸினிடம் ஒப்படைத்து அனுப்பினர்கள்.

கிரிப்ஸ் அதே சிரித்த முகத்துடன்தான் இந்தியாவில் இறங்கினர். முதலில் சில நாட்கள் நடந்த சம்பாஷணைகளிலிருந்து ஏதோ சமரஸம் ஏற்படும் போலத்தானிருந்தது. சில நாட்களுக்குப் பின் எல்லாம் மாறிவிட்டது. எனக்கு வேண்டாம் பூசனிக்காய் என்ற முறையில் எல்லாரும் அத்திட்டத்தை ஒதுக்கினர். கிரிப்ஸ் திட்டம் முறிவடைந்தது பற்றி யாரும் ஆச்சரியப்படவில்லை. ஆனல் இந்தியர் தலையில் அத்திட்டத்தைக் கட்டிவிட்டுப் போக கிரிப்ஸ் உடன்பட்டு வந்தாரே என்பது தான் பெரும் ஆச்சரியமாக இருக்கிறது. கிரிப்ஸ் இந்திய தேசீய காங்கிரஸ் தலைவர்கள் பலரின் அத்யந்த நண்பர். முக்கியமாக நேருவுக்கு மிகவும் வேண்டியவர். அவருடைய அழைப்பிற்கு இணங்கி மகாத்மா காந்திகூட தன் உடல் நிலைமையையும் பொருட்படுத்தாமல் வார்தாவிலிருந்து புதுடில்லி வந்து சேர்ந்தார். இத்தகையை இந்தியரின் நண்பர் இந்தியர்களை ஏய்ப்பதற்காகவா 6000 மைல்களுக்கப்பாலிருந்து வந்திருப்பார்? ரஷ்

யாவில் பெரிய ராஜதந்திர விஷயத்தை சாதித்துப் புகழ் நாட்டிய கிரிப்ஸ் இத்தோல்வி மூலம் முகத்தில் கரியைப் பூசிக்கொள்ள முனைந்திருப்பாரா? ஏதோ சூத்திரக்காரனின் கைலாகவப்படிதானே பொம்மைகள் ஆடவேண்டியதாக இருக்கிறது.

காங்கிரஸ் கிரிப்ஸ் திட்டத்தை நிராகரித்ததற்கு முக்யமான காரணம் உடனடியாக அதிகார மாற்றம் இல்லாதது தான். இந்தியாவின் வருங்காலத்தில் ஏற்படவிருக்கும் விஷயங்களைப்பற்றி ஆலோசித்து சீராக ஆராய்ந்து பார்க்கவேண்டியது தான்; ஆனால் இப்பொழுதுள்ள நெருக்கடியான நிலைமையில் என்ன செய்யப் போகிறீர்கள் என்று காங்கிரஸ் கேட்டது. காங்கிரஸ் காரியக் கமிட்டி வெளியிட்ட அபிப்பிராயமாவது: இப்பொழுதுள்ள முறையில் யாதொரு மாறுதலும் இல்லை. பிரிட்டிஷ் சர்க்கார் அனுப்பியுள்ள இத்திட்டம் தெளிவாக இல்லாததுடன் பூர்த்தியாகவும் இல்லை. எந்தச் சந்தர்ப்பத்திலும் இந்தியாவின் தற்காப்புப் பொறுப்பு பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்குட்பட்டே இருக்குமென்பது ஸ்பஷ்டமாகத் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. தேசத்தின் பாதுகாப்புப் பிரச்னை எந்த சமயத்திலும் முக்யமானது தான். அதுவும் யுத்த காலத்தில் எல்லா நிர்வாகமும் மற்றும் இதரப் பிரச்னைகளும் பாதுகாப்புப் பிரச்னையை ஒட்டியதே தான். இந்த நிலைமையில் பாதுகாப்புப பொறுப்பை மட்டும் நானே வைத்துக் கொள்வேனென்பது கண்ணைத்

துடைத்துவிடச் செய்யும் செய்கையாகும். இன்னும் தெளிவாகக் கூறினல் இந்தியா எந்த விதத்திலும் சுதந்திர மடையாது. யுத்த காலத்தில் இந்திய சர்க்கார் சுதந்திரத்துடன் நடந்துக் கொள்ளமுடியாது.

இந்தியர்கள் கையில் இப்பொழுதுள்ள நிலமையில் உண்மை அதிகாரம் மாறறப்பட வேண்டும். இந்தியர்கள் தாங்கள் சுதந்திர மக்கள்; யாருக்கும் அடிமை இல்லை என்பதை உணரவேண்டும். தங்கள் சுதந்திரத்தைப் பாதுகாத்துக்கொள்ளவும் அவை இனி பறிபோகாமல் பார்த்துக் கொள்ளவேண்டியதும் நம் பொறுப்பு என்று ஒவ்வொரு இந்தியரும் உணர வேண்டும். இந்தியரிடம் பாதுகாப்புப் பொறுப்பு இருந்தால் தான் பொதுமக்களின் மனப்பூர்வமான ஒத்துழைப்பைப் பெறமுடியும். இப்பொழுதுள்ள இந்தக் கடைசி நிமிஷத்திலும் ஜனங்களை ஆரவாரத்துடன் எதிரிகளை எதிர்த்துக் கொதித்தெழும்படி செய்ய முடியும். இப்பொழுதுள்ள மத்ய சர்க்காரும் சரி, மாகாண சர்க்கார்களும் சரி பாதுகாப்புவிஷயத்தில் திறமையற்றவை என்பது நன்ருக நிரூபணமாகிவிட்டது. இந்த மகத்தான பொறுப்பை இந்திய மக்களின் உண்மையான பிரதிநிதிகள் தான் நிர்வகித்து நடத்த முடியும். பூர்ண சுதந்திரம் கிடைத்தால் தான் இது சாத்தியம். அப்படி பூர்ணசுதந்திரம் கிடைக்காத நிலையில் பிரிட்டிஷ் யுத்த மந்திரி சபையின் சார்பில் சமர்ப்பிக்கப் பட்ட இத்திட்டத்தை காங்கிரஸ்

கமிட்டி ஏற்றுக் கொள்வதற்கில்லை' என்று கிரிப்ஸுக்கு 1942 ஏப்ரல் 10உ பதில் அனுப்பப் பட்டு விட்டது.

கிரிப்ஸ் திட்டத்தில் பாதுகாப்பு விஷயமாகக் கூறப்பட்டுள்ளதாவது: அரசியல் நிர்ணய சபை ஏற்படுத்திப் புது அமைப்பு திட்டமாக உருவாக் கப்படுமுன் யுத்தம் நடந்து வரும் இந்த நெருக் கடியான சமயத்தில் உலக யுத்தக் காரியத்தில் அடங்கியுள்ள இந்தியப் பாதுகாப்புக்கு வேண் டியவைகளை நிறைவேற்றவும் மேற்பார்வை பார்த்து வரவும் உள்ள பொறுப்பு பிரிட்டிஷ் சர்க்கார் வசமே யிருக்கும்.

பிரிட்டிஷ் சர்க்கார் பாதுகாப்பு பொறுப்பு தங்களிடமே இருக்கட்டும், ராணுவத்திற்கு உடைகள் தைத்துக்கொடுப்பது, பேனா பென் ஸில் சப்ளை செய்வது, இம்மாதிரியான காரியங் களை இந்தியர்களாகிய நீங்களே செய்யுங்கள் என்கிறார்கள். அதற்கு காங்கிரஸ் சம்மதிக்க வில்லை.

இத்திட்டத்தை முஸ்லீம் லீகும் நிராகரித்த தற்குக் காரணம் இருக்கிறது. பாகிஸ்தானைக் கோரும் முஸ்லீம்கள் இத்திட்டம் நம்மை பிரிக் கவே முடியாதபடி பிணைக்கும் திட்டம் என்றும் கருதும்படியும், அகண்ட அரசியலை விரும்புபவர் கள் இது நம்மைப் பிளவுபடுத்தும் திட்டம் என்று கண்டு அஞ்சும்படியும் இத்திட்டத்தின் நிபந்தனை கள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன.

கிரிப்ஸ் திட்டத்திலுள்ள அந்த தந்திரமான ஷரத்து வருமாறு:

யுத்தம் முடிவடைந்த பின் இந்தியாவுக்கு புது அரசியல் சட்டத்தைத் திட்டப்படுத்த தேர்தல்கள் மூலம் அரசியல் நிர்ணய சபை ஏற்படுத்தப்படும். இதில் சுதேச சமஸ்தானங்களையும் சேர்த்துக் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்படும்.

இந்த ஏற்பாட்டை ஒப்புக்கொண்டு அமுலுக்குக் கொண்டுவர பிரிட்டிஷார் ஏற்பாடு செய்யுமுன் இரண்டு நிபந்தனைகள் உண்டு.

(1) இந்தப் புது அரசியலமைப்பில் எந்த மாகாணமாவது சேர இஷ்டப்படாவிட்டால் அது தனித்து நிற்க உரிமையுண்டு. அந்த தனித்து நிற்கும் மாகாணம் இப்பொழுதுள்ளபடியே ஆங்கில ஆட்சிக்கு உட்பட்டிருக்கும். பிறகு இஷ்டப்படின் ஐக்ய இந்திய ராஜ்யத்தில் சேரலாம். இவ்வாறு சேர மறுத்து தனித்து நிற்கும் மாகாணங்கள் ஒன்றுகூடி தமக்கென்று தனி அரசியலமைப்பைச் செய்துகொண்டு அதை பிரிட்டிஷ் சர்க்கார் அங்கீகரிக்க வேண்டுமென்று விரும்பினுல் அவ்வாறு அங்கீகரிக்கப்படும். பின்னர் அவைகளும் சம உரிமை பெற்று சுதந்திரமாக இருக்கும்.

(2) புதியதாக அமைக்கப்படும் அரசியல் நிர்ணய சபையும் பிரிட்டிஷ் சர்க்காரும் கலந்து பேசி சமரஸத்தின் மேல் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும். அரசியல் பொறுப்பு

முழுவதும் ஒப்படைக்கப்பட்டு விடுவதால் எல்லா விஷயங்களையும் பற்றி அந்த ஒப்பந்தத்தில் முடிவு செய்ய வேண்டும். மைனுரிட்டிகளின் பாது காப்புக்காக வேண்டிய நிபந்தனைகளும் அந்த ஒப்பந்தத்தில் இருக்கும். பிரிட்டிஷ் சாம்ராஜ்யக் கூட்டுறவில் புது இந்திய அரசாங்கம் சம்பந்தப்பட்டிருக்க வேண்டுமா, இல்லையா என்பது பற்றித் தீர்மானிக்கும் சுதந்திரத்தை பாதிக்கக் கூடிய நிபந்தனை அதில் சேர்கக்ப்பட மாட்டாது.

பிரிட்டிஷார்கள் பெரிய ராஜதந்திரிகள் என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இப்படி இரண்டுங் கெட்டானுக பொடி வைத்து திட்டம் தயாரித்து அனுப்ப, பிரித்தாளும் சூழ்ச்சியில் முழுகித்திளைத்து எழுந்த பிரிட்டிஷ்காரர்களால் அல்லாது வேறு யாரால்தான் முடியும்!

சில மாகாணங்களும் சமஸ்தானங்களும் இந்திய அரசியல் அமைப்பில் சேராமல் தனித்து நிற்கும் பாத்யதையை ஒப்புக்கொள்வது இந்தியாவை பிளவு படுத்துவதேயாகும். நாட்டைச் சின்னுபின்னமாக பிரித்து விட்டு சுதந்திரம் கொடுப்பதாக வாய்ப் பெருமை பேசிக்கொண்டு நாட்டைச் சிறுகச் சிறுக ஸ்வீகரிக்கச் செய்யும் மோசமான ஏற்பாடே இது.

வர்ணக் கண்ணுடிகள் மூலம் பார்த்தால் அந்தந்த வர்ணக் கண்ணுடிகளின் நிறத்தையே எல்லாப் பொருள்களும் கொண்டிருப்பதுபோல் கிரிப்ஸ் திட்டத்தை ஒரு தினுஸாகக் கவனித்தால்

வருங்கால ஐக்கிய இந்தியா தோற்றமளிக்கிறது. மற்ருெரு தினுஸில் கொஞ்சம் ஊன்றிக் கவனித்தால் கூறுபோட்ட இந்தியாவே நம் மனக்கண் முன் நிற்கிறது. இத்திட்டப்படி இந்தியாவில் நான்கு கூறுகள் ஏற்படலாம். 1. இப்பொழுதுள்ள நிலைமையிலேயே பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்கு உட்பட்டு இருக்க விரும்பும் மாகாணங்கள். 2. புது அரசியலமைப்பில் சேரவிரும்பாத சுதேச சமஸ்தானங்கள். 3. தங்களுக்குள்ளேயே தனி யூனியனுக நிற்க விரும்பும் மாகாணங்கள். 4. மீதி ஐக்கியப்பட்ட இந்தியா. இம்மாதிரி நான்கு கூறுகளாகச் செய்துகொள்வதும் செய்துக்கொள்ளாததும் உங்கள் கையில்தானே இருக்கிறது என்று பிரிட்டிஷார் கூறுகிறுர்கள்.

உண்மை அதிகாரத்தை மாற்ற சால்ஜாப்புக் கூறும் இந்த கிரிப்ஸ் திட்டத்தை, வேண்டாமென்று தட்டிக் கழித்த இந்த குப்பையை, நாம் மீண்டும் ஏற்றுக்கொள்ள வேண்டு மென்று சிலர் யோசனை கூறுகிறுர்கள். கிரிப்ஸ் திட்டங்களிலிருந்து பிரிட்டிஷாரின் உண்மை மனப்பான்மை சந்தேகத்திற்கிடமின்றி தெளிவாகி விட்டது. காங்கிரஸும் சந்தேகத்திற்கு இடமின்றி தான் கோருவது என்ன என்பதைத் தெளிவாக்கிவிட்டது. உண்மையான அதிகாரத்தை காங்கிரஸ் கோருகிறது. அதைத்தான் கொடுக்க பிரிட்டிஷ் சர்க்கார் இஷ்டப்படவில்லை. இதுதான் இன்றைய அரசியல் முட்டுக்கட்டைக்குக் காரணம்.

இந்த நெருக்கடியைத் தீர்க்கவேண்டுமானுல் ஒன்று பிரிட்டிஷ் சர்க்கார் தங்கள் பிடிவாதத்தை விட்டு இதுவரை சுரண்டியது போதுமென்று அதிகாரத்தை இந்தியர்களிடம் மாற்றிவிட வேண்டும். சுதந்திரத்திற்காகவும் ஜன நாயகத் திற்காகவும் போரில் இறங்கியிருப்பதாக பறை சாற்றும் பிரிட்டிஷ்காரர்கள் தங்களிடமே அடிமை நாடாக இந்தியாவை வைதது்க் கொண்டிருப்பதைப்பற்றி உலகம் சிரிக்காமலிருக் குமா? இப்பொழுது ரஷ்யா செய்துவரும் ராஜ தந்திர காரியங்களை பிரிட்டன் ஆட்சேபிக்க முடி யாமலிருப்பதின் காரணம் பிரிட்டனின் முறை களையே ரஷ்யா கடைபிடிப்பதினுல் தான். யுத்தத்திற்குப் பிறகு அதிகாரத்தை விட்டுக் கொடுக்க இஷ்டப்படுபவர்கள் அந்த அதிகா ரத்தை இப்பொழுதே விட்டுக்கொடுத்தால் என்ன? பிரித்தாளும் கொள்கையை நன்ருகச் சுவைத்து அனுபவித்து ருசி கண்டவர்கள் அதி காரத்தை விட்டுக்கொடுத்துவிட முடியுமா? இல்லையெனில் காங்கிரஸாவது தன் கோரிக் கையை குறைத்துக்கொள்ள வேண்டும். எதற் காகக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்பது தான் தெரியவில்லை. நியாயமான கோரிக்கை களையே காங்கிரஸ் கேட்டிருக்கிறது. தர்மமான அஹிம்ஸா முறையில் சுதந்திரப் போராட்டத்தை நடத்தி வந்திருக்கிறது. அப்படிப்பட்ட காங் கிரஸ் காந்திஜீ மீது அபாண்டமான குற்றங்களைச் சுமத்தி சிறையில் அடைத்து வைக்கும் காரியங்

களை இந்தியாவில் மட்டுமே பிரிட்டன் செய்ய முடியும்.

இப்பொழுது நெருக்கடி தீர கிரிப்ஸ் திட்டத்தை ஏற்க வேண்டுமென்பது ஒரு கட்சி. இந்த யோசனையைத் தீவிரமாக சிபார்சு செய்பவர் நமது தமிழ் நாட்டுத் தலைவர் ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியார். சிரிப்பாய்ச் சிரித்த அந்த திட்டம் இன்னும் அப்படியேதான் இருக்கிறது. உங்களுக்காகத்தான் ஊறுகாய் போட்டு வைத்திருக்கிறேன். நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் வந்து எடுத்துக் கொள்ளலாம் என்று அமெரிதுரை இன்னும் ஏலம் போட்டுக் கொண்டிருக்கிறார்.

காங்கிரஸ் தன்னலமற்ற தூய நோக்கத்துடன் இந்தியா பூர்ண சுதந்திர மடையவேண்டுமென்கிற ஒரே நோக்கத்திற்காக 'ஆகஸ்ட்' தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. இதில் தவறு என்பது எங்கிருந்து வந்தது? தவறு செய்தவர்கள் யார்? காந்திஜீயா? காங்கிரஸா? அல்லது சர்க்காரா? தீர்மானத்தில் என்ன நிறைவேற்றபட்டது? எப்படி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க காங்கிரஸ் உத்தேசித்தது என்பதைச் சர்க்கார் கொஞ்சமாவது நினைத்துப் பார்த்து அடக்குமுறை கையாளப்பட்டதா? காங்கிரஸ் தவறு செய்தது என்பதை ஒருக்காலும் ஒப்புக்கொள்ள முடியாததுதான். ஒப்புக்கொண்டால் காரியமே கெட்டுப்போகும் என்கிற வாதத்திற்கே

இடமில்லை. செய்தது தப்பு என்று ஒப்புக்கொள்ள தவறு செய்திருந்தால்தானே.

'கெட்டுப்போனதை சீர்திருத்தப் போனால் தேசத்துரோகம் என்று கூறுகிறார்கள் என்பதும், சரியாகத்தான் நடைபெற்றது என்று பிடிவாதம் செய்வதுதான் தேசபக்தி என்று எண்ணுகிறார்கள்' என்றும் சத்யாக்கிரகம் ஒரு காலத்தில் அறிவோடு கலந்த விஷயமாகவும் அரசியல் பயனை விளைவிக்கும் விஷயமாகவும் இருந்தது. ஆனால் இப்பொழுது சக்தியிழந்த வைதீக முறையாக மாறி விட்டதென்றும் வாதிப்பது முற்றிலும் தவறானது. இந்த வாதங்கள் காங்கிரஸ்காரர்களை நன்றாக அறிந்து அவர்களோடு ஒருவராக தானும் இருந்துக் கொண்டு பிரிட்டிஷ் சர்க்காரின் பிரித்தாளும் சூழ்ச்சியையும், அவர்கள் பிடிவாத குணத்தையும் நன்றாக அறிந்துள்ள ஒருவர் அபிப்பராயம் இப்படி மாறியிருப்பதென்பது நம் நாட்டு துரதிருஷ்டவசமே தான் என்று கருத வேண்டியிருக்கிறது.

பரிபூரண சுயராஜ்யம் கிடைத்து நம்முடைய கையில் (நம் விஷயங்களை பிறர் ஒருவர் தலையீடின்றி நாமே நடத்திக் கொள்ளும்) பூரா அதிகாரமும் கிடைக்கும் வரை வேறு எவ்வித மான முறைகளையும் கையாளுவதால் பயனில்லை என்பதை காங்கிரஸ் ஒருநாள் இரண்டுநாளில் தெரிந்துக் கொள்ளவில்லை. சுமார் 50 வருஷகால அனுபவத்திற்குப்பின் பிடிவாத முள்ள சர்க்

காரை எதிர்த்து ஜயமடைய காங்கிரஸ் ஒரு வழியைப் பின் பற்றியது. அந்த வழியை எவ்வளவோ நியாயமான முறையிலும் தர்மமான முறையிலும் பின்பற்றியது. மேற் கொண்டும் அதே வழியில் நடத்த திட்டமும் போட்டிருந்தது. ‘இன்று ஆகஸ்ட் தீர்மானத்தை வாபஸ் வாங்கிக் கொள்; செய்தது தவறென்று கன்னத்தில் போட்டுக்கொள்’ என்றெல்லாம் குதர்க்கவாதம் பேசுவது முறையல்ல.

இந்தியர்கள் முன் காலத்திலும், ஏன் இப்பொழுதும் வீரத்தை யுடையவர்கள்தான். ஆனால் அவ்வீரம் வெளிப்பட முடியாமல் நாம் இப்பொழுது கோழைகளாத்தான் இருக்கிறோமென்பதை ஒரு வகையில் பகிரங்கமாக ஒப்புக் கொள்ள வெட்கப்பட வேண்டியதில்லை. வீரம் தான் இப்பொழுது மங்கியிருக்கிறதென்றால் நம்மிடையே ஒரு கட்டுப்பாடு, மானம் அவமானம் இவைகள் கூடவா அற்றுப்போக வேண்டும்.

கொடுக்கிற தெய்வம் கூரையைப்பிரித்துக் கொண்டு கொடுக்காதா? சுயராஜ்யம் நாளடைவில் தானே வந்துவிட்டுப் போகிறது அதற்காக தலைவர்கள் இப்பொழுது வீணாக சிறையிலிருந்து வாடுவானேனென்று சிலர் கூறுவது கோழைகள் வாதம். இந்த பிரிட்டிஷ் தெய்வம் சுதந்திரத்தை கூரையைப் பிரித்துக்கொண்டு கொடுக்கக் கூடியதல்ல. இது தெரியாத மிதவாதிகள் சிலர் ‘அடடா நம் ஒப்பற்ற தலைவர் காந்தியா சிறையில் கஷ்டப்படுவது? முதலில் அவர்

வெளியே வந்தாக வேண்டும். அவர் விடுதலைசெய்யப்படுவதற்கான வழிகளைச் செய்ய வேண்டும். அந்த அஹிம்ஸா மூர்த்தி இல்லாமலா உலக சமாதான மகா நாடு. அங்கே 5 அடி உயரங்கூட இல்லாத அமெரியா இந்தியா சார்பில் ஸ்தானம் பெறுவது? ஐயோ சகிக்க முடியவில்லையே! இதைக் காணுமல் எப்பொழுது என் உயிர் போகப்போகிறது'—இப்படி யெல்லாம் பிரசங்கமாகப் பேசித்தள்ளுகிறுர்கள். நாடு சுதந்திரம் பெற இன்னும் வழி ஏற்படவில்லையாம்! இதற்குள் சமாதான மகா நாடாம்! அதில் இந்தியா சார்பில் காந்திஜி செல்லவேண்டுமாம்!

பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரத்தைப் பிடுங்காமல் விட்டுவிட முடியாது. அடிமேல் அடி அடித்தால் அம்மி தானுகவே நகருகிறது. பிரிட்டிஷார் இவ்வளவு சாத்வீகப் போராட்டத்திற்கும் ஈடு கொடுக்காமல் நமக்கு டிமிக்கிக் கொடுப்பதற்குக் காரணம் பிரித்தாளும் கொள்கையை அனுஷ்டிப்பதில் அவர்கள் மகா சூரர்கள். மகா ராஜதந்திரிகள். இரண்டுபேர்களை முட்டவிடுகிறது. அந்த இரண்டு பேர்கள் மீதும் தன் ஆதிக்கத்தைச் செலுத்துவது. இந்த முறையை அவர்கள் இன்று நேற்று கையாளவில்லை. ஆகவே அவர்களை இத்துறையில் 'அமெச்சூர்கள்' என்று கூற முடியாது. பாலஸ்தினம், அயர்லாந்து முதலிய இடங்களில் அவர்கள் அப்பியசித்து வெற்றி பெற்றதையே இங்கும் கையாளுகிறுர்கள்.

கிரிப்ஸ் தூது சர்வதேச நிலைமை காரணமாக ஏற்பட்டதென்றும் ஆங்கில அரசாங்கம் ஒரு பெரிய சமாதானத்திற்கு வந்தது ஒரு பெரிய வெற்றிதான் என்றும் ஆனல் அத்தூதை இந்தியாவுக்குப் பயன்படுத்திக் கொள்ளாமல் செய்து விட்டோமென்றும் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் கூறுகிருர். இத்தூது முறிவற்குக் காரணம் யாராயிருந்தாலும் விரோதிகளின் சூழ்ச்சிகளை யறிந்து நாட்டுக்கு லாபகரமான சமரஸம் முடித்து வைக்க வேண்டிய பொறுப்பை வகித்த காங்கிரஸ் தலைவர்கள் இந்த காரியத்திற்கு வேண்டிய சாமர்த்தியத்தைக் காட்டவில்லை என்றும் தேசமக்களின் சார்பாக நடக்கிரும் என்று ஒரு ஸ்தாபனம் முன் நின்ருல் விரோதிகள் என்ன மோசம் செய்தாலும், அவற்றை எல்லாம் எதிர்பார்த்தும், சூழ்ச்சிகளுக்கும் மோசங்களுக்கும் சாமர்த்தியமாக மருந்து தேடியும் வெற்றிகரமாகக் காரியத்தை சாதிக்கவேண்டியது கடமை என்றும் ஸ்ரீ. ராஜகோபாலாச்சாரியார் சொல்லுகிருர்.

உண்மை அதிகாரத்தை உடனடியாகக் கொடுக்காத இந்த திட்டத்தை இந்தியர் தலையில் கிரிப்ஸ் சிரித்துக் கொண்டே கட்டிவிடுவார் என்பதை காங்கிரஸ் நன்ருக அறிந்துக் கொண்டுவிட்டது. இது சம்பந்தமாக பேச்சு வார்த்தைகள் நடத்த சரியான, கண்டிப்பான ஆசாமியையே காங்கிரஸ் தெரிந்தெடுத்து அனுப்பியது. சமயத்திற்குத் தக்கப்படி நடந்துகொண்டு காரி

யத்தை சாதிக்கிறேனென்ற சாக்கில் இதுவரை செய்து வந்துள்ள முயற்சிகளை எல்லாம் பாழ் படுத்தும்படி நடந்து கொள்பவர்களை காங் கிரஸ் அனுப்பவில்லை. அப்பேர்ப்பட்டவர்கள் அனுப்பப்பட் டிருந்தால் இன்று அத்திட்டம் ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கும். பேனு பென் ஸில் சாங்ஷன் செய்வது துருப்புகளுக்கு உடைகள் சாங்ஷன் செய்து சப்ளை செய்வது போன்ற வேலைகளுள்ள இலாக்காக்களை நம் அபி மானம் பெற்ற தலைவர்கள் இப்பொழுது நிர்வ கித்து நடத்திக்கொண்டிருப்பர். அந்த பாக்யம் கிடைக்க முடியாமல் இந்த ராஷ்டிரபதி செய்து விட்டார்.

ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியாரும் கிரிப்ஸை தரிசிக்கவில்லையே என்ற குறையில்லாமல் நேரே கண்டு பேசிவிட்டு வந்தார். ஆனல் அவர் காங் கிரஸ் கமிட்டியால் அனுப்பப்பட்டு போகவில்லை. எல்லா மாஜி பிரதம மந்திரிகளுக்கும் அழைப்பு வந்ததால் மாஜி பிரதம மந்திரி என்ற ஹோதாவி லேயே அவர் கிரிப்ஸைக் கண்டு பேசிவிட்டு வந்தார்.

கிரிப்ஸை தூது அனுப்பித் தங்களால் ஆனதைச் செய்து விட்டதாக பிரிட்டிஷார் பிரசா ரம் செய்து கொள்கிருர்களே என்று ஸி. ஆர். கவலைப் படுகிருர். இம்மாதிரி பிரசாரம் ' அப்பா குதிருக்குள் இல்லை' என்பதைப் போன்றதே தான். இந்த பிரசாரத்திற்காகப் பயப்பட்டுக்

கொண்டு அவர்கள் எதைக்கொடுத்தாலும் வாங்கிக் கட்டிக்கொள்ளவேண்டுமென்று அர்த்தமா?

சில எம். எல். ஏக்கள் மலையைப் புரட்டிவிடப்போவதாக நினைத்துக் கொண்டு கூட்டம் போட்டு யோசிக்க ஆரம்பித்தனர். சென்னையில் இவர்கள் கூட்டம் இருமுறை நடந்தது. இன்னும் பல இடங்களில்கூடி அரசியல் நிலைமையை விவாதிக்கப்போகிறார்களாம் இவர்கள். எந்த அரசியல் நிலைமையைப் பற்றி விவாதிக்கப் போகிறார்கள்? அப்படி விவாதித்து தான் என்ன செய்யப் போகிறார்கள்?

அரசியல் நிலைமை என்று இன்று இந்தியாவில் ஏதாவது இருக்கிறதா? யுத்த நிலைமையால் ஏற்பட்ட அவசர நிலைமையின் காரணமாக மாகாணங்களில் நடக்கும் எதேச்சாதிகாரம்தான் இப்பொழுதுள்ள நிலைமை.

இப்பேர்ப்பட்டவர்களுக்கு ஸ்ரீமதி சரோஜினி அழுத்தம் திருத்தமாக எச்சரிக்கை செய்திருக்கிறார். காங்கிரஸ் ஆணையொன்றையேதான் நாம் லட்சியமாகக் கொண்டு நடக்கவேண்டும். பிறர் அபிப்பிராயங்கள் கூறுவதை நான் தடுக்க வரவில்லை. ஆனால் காங்கிரஸ் கையாளாத புது வழிகளையோ, காங்கிரஸ் இப்பொழுது சொல்வதை ஆட்சேபித்து வேறுவழிகளையோ சொல்லும் காங்கிரஸ்காரர்கள் தயவுசெய்து காங்கிரஸை விட்டு விலகி தங்கள் யோசனைகளை நடத்திப் பார்க்கட்டும் என்று அவர் கூறியிருக்கிறார். இதற்குப் பிற

கும் சிலர் காங்கிரஸிலிருந்து கொண்டே அதே முயற்சிகள்தான் செய்யப் போகிறார்கள் என்றால் அவர்களை துரோகிகள் என்று தான் கூற வேண்டும்.

இதில் ஒரு விசேஷமென்ன வென்றால் மித வாதத் தலைவருக்குப் படக்கூடிய நியாயமும் தர்ம மும் காங்கிரஸிலேயே இருந்தவர்களுக்குப் புலப் படவில்லையே என்பதுதான். மிதவாதத் தலைவர் களில் ஒருவர் ஸர். சிமன்லால் செதல்வாட் எம். எல். ஏக்களின் முயற்சி பற்றி கூறியதாவது: "இம் முயற்சிகள் வெற்றிகரமாக என்னசாதிக் கும் என்பதுபற்றிதான் சந்தேகமாக இருக்கிறது. காங்கிரஸ் தலைவர்கள் தங்கள் நாட்டின் சுதந் திரத்தைக் கோரி சிறையிலடைப்பட்டுக்கிடக் கிறார்கள். அவர்கள் எவ்வளவுக்கவ்வளவு அதிக காலம் சிறையிலிருக்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு ஜனங்களுக்கு அவர்களிடம் பக்தி அதி கரிக்கும். தலைவர்களைச் சிறையில் அடைத்து விட்டதால் காங்கிரஸே அழிந்துவிட்டதாகக் கருதுவது அறியாமை. ஜனங்களின் மனோதத்வம் தெரியாதவர்கள்தான் அப்படி நினைப்பார்கள்"

இதைவிட இன்னும் அதிகமாக எதுவும் கூறுவதற்கில்லை. இந்திய ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீ பி. கோதண்டராவும் சர்க்கார் போக் கைக் கண்டித்து "காங்கிரஸை அவமானப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தை சர்க்கார் கொண் டிருக்கிறார்கள் போலிருக்கிறது. இந்திய முனையில்

'வாபஸ்' கூடாது" என்று கூறியிருக்கிறார். இந்த மிதவாதிகள் காங்கிரஸ் செய்த காரியங்களையே குற்றம் குறை கூறிவந்தவர்கள். அவர்களே இப்பொழுது இப்படி கூறுவதென்றால் காங்கிரஸின் நிலைமை எவ்வளவு நியாயமானதென்றும் புலப்படும். சர்க்கார் இப்பொழுது நடந்து கொள்ளும் முறை காங்கிரஸை எதிர்ப்பவர்கள்கூடக் கண்டு வெறுப்படையும்படி இருக்கிறதென்பது நாளுக்கு நாள் தெளிவாகிக்கொண்டே வருகிறது.

இந்த முட்டுக்கட்டையைத் தீர்க்க முஸ்லிம் லீக் காரர்கள் என்ன சொல்கிறார்கள் என்று கவனிப்போம். 'எங்கள் ஒரே கோரிக்கையான பாகிஸ்தானை ஒப்புக்கொள்ளுங்கள் இன்றே உங்களுடன் சேர்ந்துகொண்டு பிரிட்டிஷாரை எதிர்த்து நடைபெறும் சுதந்தரப் போராட்டத்தில் நாங்களும் சேர்ந்துகொள்ளுகிறோம் என்று காங்கிரஸை நோக்கிச் சொல்லுகிறார்கள்.

முஸ்லிம் கோரிக்கைகளை ஒப்புக்கொண்டு விட்டுக்கொடுக்கும் விஷயத்தில் இன்னும் தாராளமாக இருக்க வேண்டும் என்பதே ஸ்ரீ. ஸி. ராஜகோபாலாச்சாரியாரின் கோரிக்கை.

முஸ்லிம்லீக் அரசியல் கிளர்ச்சியில் காங்கிரஸுடன் ஒத்துழையாமையை அனுசரித்து வருகிறது. இப்பொழுது நாட்டிலுள்ள நெருக்கடிக்கு முக்கியமானகாரணம் நாட்டிலுள்ள இரு பெரிய கட்சிகளான காங்கிரஸ், முஸ்லிம்லீக்

இவைகள் இரண்டுக்குமிடையேயுள்ள ஒத்துழை யாமையேதான். கிரிப்ஸ் திட்டத்தில் பொதுஜன வோட்டின் பேரில் பாகிஸ்தான் அமைக்க வசதி யளிக்கப்பட்டிருந்தது. ஆனால் உடனே பாகிஸ் தான் கிடைத்தாக வேண்டுமென்றும் முஸ்லிம் மகாஜன வோட்டே எடுக்கப்படவேண்டுமென் றும் முஸ்லிம்லீக் வற்புறுத்தியது. ஆகவே கிரிப்ஸ் திட்டத்தை முஸ்லிம்லீகும் நிராகரிக்கும்படியாக நேர்ந்தது.

பாகிஸ்தான் கொள்கையை நாட்டின் நலனைக் கருதி காங்கிரஸ் எதிர்த்து வந்திருக்கிறது. இது சம்பந்தமாக காங்கிரஸ் நிலைமைபற்றி காந்திஜி கூறியிருப்பதாவது :—

'பாகிஸ்தான் ஒன்றே ஜின்னாவின் லக்ஷ்யமாக இருந்தால் இந்தியாவை துண்டிக்கக் கூடாதென் பதே எனது லக்ஷ்யம். அதனால்தான் இந்த நெருக்கடி. இந்தியா ஒன்று. பாகிஸ்தான் இயக் கம் அசாத்தியம். இந்தியாவை துண்டு போட முடியாது. முதலில் என்னைத் துண்டு போடட் டும். பின்பு இந்தியாவைத் துண்டு போடலாம்.'

காங்கிரஸ் அபிப்பிராயமாவது :—

" இந்தியாவிலுள்ள சகல மதஸ்தர்களுக்கும் மத சம்பந்தமான பூரண சுதந்திரம் அளிப்பதி லும், அவரவர் பாஷைகள், கலாசாரங்களைப் பாதுகாப்பதிலும், எல்லாருடைய பிரஜா உரிமை களையும் நிர்த்தாரணப்படுத்தி நிலைநிறுத்துவதி லும் காங்கிரஸ் யாருக்கும் பின்னால் நின்றதில்லை

பாகிஸ்தானின் அரசியல் அம்சங்கள் எவையா யிருந்தபோதிலும் அதுசென்ற 700 வருஷங்களாக இந்நாட்டில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்று சேர்ந்து உருவகப்படுத்தியுள்ள கலாசார சமூக அமைப்புக்கு பெரும் ஆபத்து என்பதில் சந்தேகமே இல்லை.

இந்தியாவைக் கூறுபோட முடியாது. முஸ்லிம்களுக்கு நாம் பலவிதச் சலுகைகள் காட்டத் தயாராக இருக்கிறோம். அவசியமானால் அரசியல் நிர்ணய சபைக்கு அவர்கள் தாங்களாகவே தனித்தொகுதி மூலம் தங்களுக்கு வேண்டிய பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து அனுப்பட்டும்."

முதன் முதலில் முஸ்லிம்கள் தனித் தொகுதி தான் வேண்டுமென்று கேட்டார்கள். ஜின்னா சாகிபும் இதற்காக மிகவும் போராடினார். தனித் தொகுதி கிடைத்ததும் தான் அதனால் ஏற்பட்ட பாதகங்கள் தெரிய வந்தன. முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு அரசியல் நிர்வாக அதிகாரத்தில் போதிய பங்கு ஏற்பட வசதியில்லாமல் செய்து விட்டது. தங்களுக்கு பாதுகாப்பு என்று முஸ்லிம்கள் கருதிய தனித் தொகுதி, தாங்கள் கேட்டது தங்களுக்கே கெடுதிவிளைத்தது கண்டு முஸ்லிம் தலைவர்களுக்கு ஆத்திரம் எழுந்தது. இப்பொழுது தனித் தொகுதி வேண்டாம். கலப்புத் தொகுதி ஸ்தானங்கள் ஒதுக்க வேண்டுமென்று சொல்ல காயதே ஆஜம் வெட்கப் படுகிறார். இப்பொழுது தனித்தொகுதி தனிராஜ்யக் கோரிக்கையாக மாறிவிட்டது.

தனித் தொகுதி முறை ஏற்பட்டதின் பலன் ஹிந்துக்கள் மெஜாரிட்டி ஜனத்தொகையாக உள்ள மாகாணத்தில் மெஜாரிட்டிக் கட்சியில் போதிய அங்கத்தினர்கள் இல்லாமல் போகும் படியாகி விட்டது. மந்திரி சபையிலும் அவர் களது தொகை குறைவாக இருந்தது. கலப்புத் தொகுதி மட்டும் இருந்திருக்குமாயின் ஜனத் தொகையில் மைனரிட்டியாகவுள்ள முஸ்லிம் களும் மந்திரி சபையில் அதிக ஸ்தானங்களைப் பெறுவதென்பது அசாத்தியமல்ல.

மந்திரி சபையில் போதிய இடம் கிடைக் காததைக் கண்டு ஜின்னு பழியை யெல்லாம் பார்லிமெண்டரி ஜனநாயக முறை மீது போடு கிருர். பார்லிமெண்டரி ஜனநாயக முறைப்படி எந்தக் கட்சிக்கு மெஜாரிட்டி இருக்கிறதோ அந்தக் கட்சிதான் நிர்வாகத்தை நடத்த வேண்டும். மெஜாரிட்டி பெற்றுள்ள கட்சி களில் போதிய முஸ்லிம்கள் இருந்தால் மந்திரி சபையில் அதிகமான முஸ்லிம்கள் இருப்பது சாத்யமேதான்.

சுயராஜ்யம் கிடைத்துவிட்ட பிறகு தேர்தல் பிரச்னைகள் புது முறையாகவே அமையும். அம் முறைப்படி ஒரே கட்சி பெருவாரியான மெஜாரிட்டியுடன் வெற்றிபெறும் நிலைமையிலும் எல்லாக் கட்சிகளிலும் முஸ்லிம்களும் ஹிந்துக் களும் இருப்பார்கள். இந்த வகுப்பினரின் ஆதிக்கம் அந்த வகுப்பினரின் ஆதிக்கம் என்ற நிலைமை இருக்கவே இருக்காது.

பாகிஸ்தானிகள் கோருவது தான் என்ன?

1. இந்தியாவில் முஸ்லிம்கள் மெஜாரிட்டியாக வசிக்கும் பாகங்களை அங்கங்கே தனி ராஜ்யங்களாக அமைக்க வேண்டும்.

2. பாகிஸ்தான் திட்டப்படி ஏற்படும் முஸ்லிம் மாகாணங்கள் தம்மிடையே ஒரு சமஷ்டியை அமைத்துக் கொள்ள வேண்டும். பரிபூர்ண ராஜாங்க கௌரவம் இந்த சமஷ்டிக்கு ஏற்பட வேண்டும்.

பாகிஸ்தான் என்ருல் பாஷை வாரியாக மாகாணங்கள் பிரிக்கப்படுவது போல் ஜனத் தொகையில் எந்த மதத்தினர் எங்கு அதிகமாக இருக்கிருர்கள் என்று பார்த்து வேறுவிதமாக மாகாணங்களைத் திருத்தி யமைக்க வேண்டுமென்று அர்த்தம் என்ருல் இத் திட்டத்திற்கு இவ்வளவு எதிர்ப்பு இருக்காது. மதத்தை அடிப்படையாகக் கொண்டு ஹிந்துமாகாணம், முஸ்லிம் மாகாணம் என்று நிர்வகிக்கப் படவேண்டுமென்று 'பாகிஸ்தான்' கேட்கிறது. இந்தியாவின் எந்தப் பகுதியையும் ஹிந்து ராஜாங்கமாகவோ முஸ்லிம் ராஜாங்கமாகவோ அனுமதித்திருக்க முடியாது. அது நாட்டைக் கூறு போடுவதுடன் தேசத்திற்கே பெரும் ஆபத்தைத் தேடிக் கொள்வதாகும்.

பாகிஸ்தானிகளின் மற்ருெரு கோரிக்கை மிகவும் அபாயகரமானது: பாகிஸ்தானின்படி ஏற்படும் முஸ்லீம் மாகாணங்கள் ஏற்படுத்திக்

கொள்ளும் சமஷ்டிக்கு பரிபூர்ண ராஜாங்க கௌரவம் ஏற்பட வேண்டுமாம். இக்கௌரவத்துடன் கூடிய பாகிஸ்தான் ஏற்படுகிறதென்றே வைத்துக் கொள்வோம். இந்தியாவில் முஸ்லிம் ராஜ்யத்திற்கு வெளியிலுள்ள மற்றப்பகுதிகள் அந்நிய நாடுகளாகக் கருதப்படும். ஹிந்து ராஜாங்கமும் முஸ்லிம் ராஜாங்கமும் சேர்ந்து வாழலாம்; அல்லது சிண்டைப் பிடித்துக்கொண்டு சண்டைக்கு நிற்கலாம். இந்தியாவிலேயே இரண்டு ராஜ்யங்கள் ஒன்றோடொன்று மோதிக்கொள்ள உரிமை ஏற்படவேண்டு மென்பதே இதன் அர்த்தமாகிறது. இதனால் ஏற்படும் நிலைமை என்ன ?

1. இப்பொழுது சீனாவுக்கும் ஜப்பானுக்குமிடையே போர் நடந்து கொண்டிருக்கிறது. இந்தியாவிற்குள் இருக்கும் இரண்டு ராஜாங்கங்கள் ஒன்று சீனாவையும் மற்றொன்று ஜப்பானையும் ஆதரிக்கலாம். அதன் பொருட்டு இந்தியாவிலேயே இந்த இரண்டு ராஜாங்கங்களும் மல்லுக்கு நிற்கும் நிலைமை ஏற்படும். அதாவது சீன-ஜப்பான் யுத்தம் இங்கேயே ஏற்படும்.

2. இந்தியாவெங்கும் ஹிந்துக்கள் புனிதமென்று கருதும் க்ஷேத்திரங்கள் இருக்கின்றன. சில ஸ்தலங்கள் பாகிஸ்தானத்திற்குள் அகப்பட்டுக் கொள்ளும். ஒரு பகுதியிலுள்ளவர்கள் மற்றொரு பகுதியிலுள்ளவரை வெளி நாட்டவராகக் கருத வேண்டியிருக்கும்.

3. போக்கு வரத்து பிரச்னைகள், ஏற்றுமதி இறக்குமதி பிரச்னைகள் இந்தியாவிற்குள்ளேயே ஏற்படும்.

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு எளிது தானே! இரண்டு ராஜாங்கங்களும் சண்டை போடும் சமயத்தில் அந்நியர் பிரவேசிப்பர். இந்த நிலைமையில் இரண்டு ராஜ்யங்களும் சுதந்திரத்தை இழக்க நேரிடும். இரண்டு ராஜ்யங்களும் அந்நிய ஆதிக்கத்தில் அடிமைப்பட்டுப் போகும் நிலைமை சீக்கிரத்திலேயே ஏற்படும்.

இந்தியாவில் ஒவ்வொரு பகுதியிலும் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்றாகவே கலந்து வாழ்ந்து வருகிறார்கள். ஆகவே இப்பொழுது பாகிஸ்தான் ஏற்பட வேண்டுமென்றால் இரண்டு ராஜாங்கங்களும் ஒரு செக்கோஸ்லவாகியாவாகத் தங்களுக்குள்ளே ஒரு 'ஸுடேட்டன்' நிலைமையைச் சமாளிக்கவே வேண்டியிருக்கும். முதல் மகாயுத்தம் முடிந்த பின் ஹங்கேரி, ஆஸ்டிரியா, ஜுகோஸ்லவாகியா முதலிய நாடுகள் வேர்ஸைல்ஸ் ஒப்பந்தப்படி பல துண்டுக்களாக்கப்பட்டன. ஒவ்வொரு துண்டும் ராஜாங்க கௌரவமுள்ளதாக ஏற்படுத்தப் பட்டதின் பலன் பொருளாதார அமைப்பில் தலை தூக்கமுடியாமல் இந்நாடுகள் சீரழிந்து போயின.

ராஜாங்க கௌரவமுள்ள இரு தனி ராஜ்யங்கள் இந்தியாவில் ஏற்படு முன் அனுபவ சாத்திய மற்ற சில பிரச்னைகள் குறுக்கிடுகின்றன. மாகா

ணங்களில் இப்பொழுது ஹிந்துக்கள், முஸ்லிம்கள் கலந்து வாழ்கின்றனர். ஆனல் ஒரு மாகாணத்தில் ஹிந்துக்கள் மட்டுமே இருக்கவேண்டும்; ஒரு முஸ்லிம் கூட இருக்கக்கூடாது. அதே மாதிரி மற்ருெரு மாகாணத்தில், முஸ்லிம்கள் மட்டுமே இருக்க வேண்டும்; ஒரு ஹிந்துகூட இருக்கக்கூடாது. சீக்கியர் கிருஸ்துவர்கள் இவர்கள் சமாசாரம் என்ன? இவர்களுக் கெல்லாம் எந்த விதத்தில் பாதுகாப்பு அளிப்பது? ஒரே வகுப்பினர் வாழும் மாகாணத்தில் மதமாற்றங்கள் ஏற்படக்கூடாது—இம்மாதிரி பிரச்னைகளுக்குச் சமாதானம் ஏற்படாமல் ஸ்தாபிக்கப்படும் ராஜாங்க கௌரவமற்ற நாடுகள் நீண்ட காலம் நிலைத்திருக்க முடியாது. ஆகவே பாகிஸ்தான் யோசனை அனுபவசாத்தியமேயில்லை.

(ராஜாங்க கௌரவம் என்ருல் சர்வ சுதந்திரமுள்ள பூர்ண சுயேச்சை நாடு என்பதுடன் இதற்குத் தனி ராணுவமும் அந்நிய நாட்டுக் கொள்கையும் வைத்துக் கொள்ள உரிமை உண்டு.)

பாகிஸ்தான் திட்டப்படி ஏற்படுத்தப்படும் முஸ்லிம் ராஜ்யம் இஸ்லாம் மதத்தையும் அதன் கொள்கைகளையும் பரப்புவதற்காகவே ஏற்படுத்தப்படும் மத சம்பந்தமான ராஜ்யமாகத் திகழும். மதத்தை வைத்துக் கொண்டே முஸ்லிம் லீகர்கள் பூச்சாண்டி காட்டி வருகிருர்கள். தேர்தல்களின் போது அரசியல், சமூகம், பொருளாதார

பிரச்னைகளை ஆதாரமாகக் கொண்ட கட்சிகளில் சேர்ந்தவர்களாக முஸ்லிம்கள் தேர்தல்களுக்கு நிற்பது அசாத்தியமாகி விட்டது. தேர்தல் தொகுதியானது மதத்தைப்பற்றிய தொகுதியாக இருப்பதினால் மத சம்பந்தமான பீதியைக் கிளப்பி பிரசாரம் செய்வது சகஜமாகிவிட்டது.

இந்த மைனாரிட்டி பிரச்னை என்பது இந்தியாவில் மட்டும் இருக்கும் பிரச்னையல்ல. ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு காலத்திலும் இந்த பிரச்னை இருந்தே வருகிறது. ஒரு நாட்டில் மதம், பாஷை, வகுப்பு இவைகளை யெல்லாம் அடிப்படையாகக் கொண்டு மைனாரிட்டிகட்சிகள் ஏற்படுகின்றன. இவைகளை தடுப்பதென்பது முடியாத காரியம். ஆகவே மைனாரிட்டி பிரச்னைகளை தைரியமாகத் தீர்க்க முன்வர வேண்டியதே தக்க யோசனை.

சென்ற உலக யுத்தம் ஏற்பட்டதின் முக்ய காரணம் மைனாரிட்டி பிரச்னையே தான். இப்பொழுது நடக்கும் யுத்தம் ஏற்பட்டதற்குக் காரணம் போலந்திலுள்ள ஜெர்மன் மைனாரிட்டியும், 'ஸுடேட்டன்' ஜெர்மானியர்களும்தான்.

மெஜாரிட்டி ஆட்சி மைனாரிட்டிகளின் உரிமைகளைக் கவனியாமல் நடைபெறக் கூடாது. அதேபோல் மைனாரிட்டிகள் கோரிக்கைகளுக்கும் ஒரு அளவு இருக்கிறது. தேசத்தின் ஐக்யத்தைக் குலைக்காமல் இருக்கவேண்டும் மைனாரட்டியாரின் கோரிக்கைகள். மைனாரட்டிப் பிரச்

சனைகள் நாளுக்கு நாள் அதிக சிக்கலாகிக் கொண்டே வருகிறது. நாட்டைக் கூறுபோட்டு விடுவதால் மட்டும் இப்பிரச்னைகளை அறவே தீர்த்து விடமுடியாது. இம்மாதிரி பாகம் பிரிக்க வேண்டுமென்பதே ஒத்துவாழ மறுக்கும் ஒரு பிடிவாதத்தையே காட்டுகிறது.

வகுப்பு, மதம், பாஷை இவைகள் சம்பந்தப் படாத சமூகம், அரசியல், பொருளாதார பிரச்னைகள் மைனாரிட்டிகளுக்கு மட்டுமின்றி மற்றவர்களுக்கும் பொதுவானதே. ஆகையால் இந்த பிரச்னைகள் பொதுவாகக் கருதப்பட வேண்டுமே யொழிய, இவ்விஷயங்களில் மைனாரட்டிகளுக்கு மட்டும் தனிப்பட்ட முறையில் கவனிப்பதற்கில்லை.

வகுப்பு, மதம், பாஷை இவைகளை அடிப் படையாகக் கொண்டு பிரியும் மைனாரிட்டிகள் தான் அங்கீகரிக்கத் தக்கவை. லிபரல்கள் கம்யூனிஸ்ட்டுகள் என்ற அரசியல் மைனாரிட்டிகளும், பிராம்மணர் பிராம்மணரல்லாதார் என்ற சமூக மைனாரட்டிகளும், விவசாயிகள், தொழிலாளர்கள் என்ற பொருளாதார மைனாரட்டிகளும் அங்கீகரிப்பதற்கில்லை. அரசியல், சமூகம், பொருளாதாரம் என்ற விஷயங்களில் மைனாரிட்டிகளுக்கு ஒன்று மெஜாரிட்டிகளுக்கு ஒன்று என்றிருக்க முடியாது.

லாபமோ நஷ்டமோ முஸ்லிம்கள் தங்களுக்கு வேண்டுமென்று கேட்பதை ஏன் மற்றவர்கள்

ஆட்சேபிக்க வேண்டும் என்று சிலர் விதண்டா வாதம் செய்கிறார்கள். இது பைத்தியக்காரவாதம். நாட்டிற்கே தீங்கு. ஹிந்து முஸ்லிம் இருவர்களுக்குத் தீங்கு என்று கருதப்படும் திட்டத்தை ஆட்சேபிக்காமலென்ன செய்வது? மற்றொரு விஷயம். இந்தியாவிலுள்ள 8 கோடி முஸ்லிம்களும் பாகிஸ்தான் கேட்கவில்லை. சிலர் இப்பொழுது நிச்சயமாக வரவேற்றாலும் நிச்சயமாகக் கிடைக்கப் போகிறதென்று ஏற்பட்டால் சிலர் பின்வாங்கவும் கூடும். 8 கோடி முஸ்லிம்களும் வேண்டினால் அதை யாரும் தடுக்கவே மாட்டார்கள். தடுக்கவே முடியாதென்றும் காந்திஜியே கூறியிருக்கிறார்.

பிரிட்டிஷ் மாஜி பிரதம மந்திரி ஸ்ரீ. ஜே. ராம்ஸே மாக்டனால்ட் "பிரிட்டிஷாரே பிரித்தாள எண்ணுவது ஒருபுற மிருந்தாலும், இந்தியரே தங்களுக்குள் பிரிவினையும் செய்து கொள்ள முனைந்து விட்டார்கள்' என்று ஒரு சமயம் கூறியிருக்கிறார். ஒரு வெள்ளையர் நம்மை பார்த்துக் கேலிபண்ணும்படியாக ஆகிவிட்டதல்லவா?

இந்த பாகிஸ்தான் இந்தியாவை மைனாரிட்டி மயமாய் செய்யவேதான் உதவும். ஜின்னா சாகிபு ஹிந்து மெஜாரிட்டியை மட்டும் நம்ப மாட்டாராம். ஆனால் ஹிந்து மைனாரிட்டிகள் மட்டும் இவரை நம்பவேண்டுமாம். இவ்வளவையும் இங்கு விஸ்தரிக்க வேண்டியதின் அவசியம் என்னவெனில் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார்

சொல்வதுபோல் முஸ்லிம் லீக் கோரிக்கைகளுக்கு இணங்கி விட்டால் பிரச்னைகள் தீர்ந்துவிடும் என்பது உண்மையானதல்ல என்பதை வெளிப் படுத்தவேதான்.

மானத்தை விற்காமல் பிரிட்டிஷ் சர்க்காரின் பிரதிநிதிகளுடன் சமரசம் செய்து கொள்வதற்கு மார்க்கம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. வைஸ்ராய்கள் வரலாம், வைஸ்ராய்கள் போக லாம். ஆனால் இந்தியாவைத் தங்கள் மஞ்சள் காணியாக வைத்துக் கொண்டு ஆளவேண்டும் என்ற பேராசை மட்டும் பிரிட்டிஷாரை விட்டுப் போகவே இல்லை. லின்லித்கோ போனார். வேவல் வந்தார். ஆள்தான் மாறுதலே யொழிய பிடிவாதத்தில் ஒரு சிறிதளவுகூட மாறுதலில்லை யென்பதை டிசம்பர் மாதக் கடைசியில் கல்கத்தா வில் செய்த பிரசங்கத்தில் வேவல் துரை காட்டி விட்டார். கொஞ்சம் நஞ்சம் யாருக்காவது சந் தேகம் தோன்றக் கூடாதே என்பதற்காக 1944 பிப்ரவரி 17உ மத்ய சட்ட சபைகளில் செய்த பிரசங்கத்தில் கொஞ்சம்கூட தப்பார்த்தத்துக்கு இடமில்லாத வகையில் வேவல் பேசிவிட்டார்.

"காங்கிரஸ் தலைவர்களை விடுவதா? அதென்ன பைத்தியக்காரத் தனமான கோரிக்கையா யிருக் கிறதே. அந்தக் கல்லுடி மங்கர்களை விடுதலை செய்வதால் ஏதாவது பலனேற்படப் போகிறதா? அவர்களுடைய முட்டாள்தனத்தினால் இந்தியா வில் எவ்வளவு கஷ்டங்கள் நேர்ந்து விட்டன.

இந்தத் தவறை அவர்கள் உணராத வரையில் அவர்களைப் பற்றி நினைப்பதைக் கூட விட்டு விடுங்கள். அந்த அசடுகள் எப்படியாவது நாச மாய்ப் போகட்டும். அவர்கள் இல்லாததால் நாட் டில் நிர்வாகம் இல்லாமல் போய்விடுமோ வென்று பயப்படாதீர்கள். நான் இருக்கிறேன். எனக் குத் துணையாக மதிப்பும் தேச பக்தியும் வாய் ந்த சுமார் ஒரு டஜன் இந்தியர்கள் என் நிர்வாக சபையில் இருக்கிறார்கள். எங்களைவிட இந்தத் தலைவர்கள் வந்து என்ன கிழித்துவிடப் போகிறார் கள் ? அவர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும் படிகூட நான்விடப் போவதில்லை. எல்லோ ரையும் தனித்தனியாக 'ஐஸ் கூல்' மிஷினிலேயே தான் வைத்திருக்கப் போகிறேன். செய்த தவறை அவர்கள் தெரிந்து கொள்வதற்கும் பள்ளிக்கூடம் நடத்த வேண்டுமா என்ன ? பேசாமல் இருங்கள், நான் கவனித்துக் கொள்ளுகிறேன்" என்று வேவல் சொல்லி விட்டார்.

தலைவர்களை விடுதலை செய்யப் போவதில்லை என்று கதவைச் சாத்தி தாள் போடுவதோடு வைஸ்ராய் திருப்தி யடையவில்லை. சிறு திட்டி வாசற்படி ஒன்றைத் திறந்து வைத்து "வருகிற வர்கள் சீக்கிரம் உள்ளே வாருங்கள்" என்று ரகசியமாக ஜாடை காட்டி அழைக்கிறார்.

இந்தியாவில் சகல கட்சியினராலும் நிராக ரிக்கப்பட்ட கிரிப்ஸ் திட்டத்தை இவ்வளவு காலம் கழித்து லார்ட் வேவல் ஊர்வலத்துக்கு

அழைத்துக் கொண்டு வருவதின் கருத்து வேறு என்னவாயிருக்கும்? ஊரை ஏய்ப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட அந்த மோசடியை வெட்ட வெளிச்சமாக்கிய தேசத் தலைவர்கள் உள்ளே அடை பட்டுக் கிடக்கிறார்கள். ஆனால், அதில் ஏதோ பிரமாதமாக இருப்பதாகத் தம்மை ஏமாற்றிக் கொள்வதோடில்லாமல், பிறரையும் ஏமாற்றுபவர்கள் சிலர் இருக்கிறார்களல்லவா? அவர்களையாவது மெல்லத் தன் பக்கம் இந்த சமயத்தில் இழுக்கலாமோ என்று வேவல் ஆசைப் படுவதாயிருக்கலாம். கிரிப்ஸ் திட்டத்திற்கு இன்னும் உயிர் இருக்கிறது என்று இப்போது அறிவிப்பதின் மூலம் லார்ட் வேவல் அவர்களுக்கு ஆசை காட்ட முயற்சிக்கிறார் என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது. ஒருக்கால் வெளியே உள்ளவர்களின் உதவியைக் கொண்டு இதை உயர்ப்பிக்க முயற்சிக்கலாம். அவர்களும் அதற்குச் சம்மதித்து எதாவது ஒரு நிர்வாக ஏற்பாட்டுக்கு சம்மதிக்கலாம். அப்படி ஏற்படும் புது நிர்வாகம் தலைவர்களை விடுதலை செய்வதாக வைத்துக் கொள்வோம். தலைவர்கள் வெளியே வரும் சமயத்தில் கிரிப்ஸ் திட்டம் அமுலிலிருந்தால், தலைவர்கள்தான் என்ன செய்ய முடியும்? இது வெறும் கனவல்ல. தலைவர்களை உள்ளே வைத்துக் கொண்டு, கிரிப்ஸ் திட்டத்தை ஒப்புக் கொள்ள வேண்டுமென்று வெளியே உள்ள சிலர் பிரசாரம் செய்வதின் கருத்து வேறென்னவா யிருக்க முடியும்? இந்த ஆபத்து நேர்ந்துவிடா

மல் பார்த்துக் கொள்ளுவதே தேச மக்களின் முக்கியமான கடமையாகும். பொது ஜன அபிப்பிராயம் உஷாரா யில்லாவிட்டால், மக்களின் நன் மதிப்பையும், நம்பிக்கையையும் பெற்ற தலைவர்கள் பின்புறமிருந்து குத்தப்பட்டு, காட்டிக் கொடுக்கப்பட்டு விடுவார்கள்.

எங்கு திரும்பினாலும் இடையூறுகளாயிருக்கும் இந்த நிலைமையில் என்னதான் செய்வது? காங்கிரஸ் மகா சபை ஏதாவது திட்டம் கொடுத்திருந்தாலும் அதன்படியாவது செய்யலாம். காங்கிரஸ் திட்டமும் ஒன்றும் இல்லையே என்ற கேள்வி எழுவது இயற்கையே.

காங்கிரஸ் திட்டம் எதுவுமில்லையே என்று சொல்லுபவர்கள் மனமறிந்த கோழைகள் என்று சொல்ல நான் கொஞ்சமும் தயங்க வில்லை. காங்கிரஸ் திட்டம் இருக்கிறது என்று பகிரங்கமாக அவர்களுக்கு பதில் சொல்லுவது சாத்திய மில்லை. இப்படிச் சொல்லத் துணிபவர்கள் உடனே பாது காப்புச் சட்டத்தின் பாணத்திற்கு இரையாக வேண்டி யிருக்கும். காங்கிரஸ் திட்டம் இல்லையே என்று நீலிக் கண்ணீர் விடுபவர்களுக்கும் இந்த பலஹீனமான நிலைமை நன்ருகத் தெரியும். நாம் கேட்டால் காங்கிரஸ் காரர்கள் அதற்கு பதில் சொல்ல முடியாது என்று நன்ருகத் தெரிந்திருப்பதினுல் தான் துணிந்து அப்படிக் கேட்கிருர்கள். அவர்களைக் கோழைகள் என்று சொல்லாமல் வேறென்ன சொல்லுவது?

காங்கிரஸுக்கு திட்டமில்லை என்று சொல்லுவது பச்சைப் பொய். காங்கிரஸுக்கு திட்டம் இருக்கிறது.

காங்கிரஸ் மகா சபையினுல் மாற்றப் படுகிற வரையில் அல்லது வாபஸ் பெறப்படுகிற வரையில் 1942 ஆகஸ்ட் மாத ஆரம்பத்தில் பம்பாயில் அ. இ. கா. கமிட்டியால் நிறைவேற்றப் பட்ட தீர்மானம் தான் காங்கிரஸின் திட்டம். இதுதான் தேச பக்தர்களின் சுதந்திர சாசன பிரகடனம். அதுதான் இந்தியர்களுக்கு அரசியல் விமோசனம்.

ஒன்றுமே தெரியாத பச்சைக் குழந்தைகளைப் போல் "காங்கிரஸுக்கு திட்டமில்லையே" என்று கேட்கும் கோழைகளுக்கு இதுதான் பதில்.

அத்தீர்மானம் காங்கிரஸின் ஆணை. இந்தியர்களின் தேசபக்தி உணர்ச்சியை நம்பித் தன் வாழ்க்கையின் கடைசிப் போராட்டம் என்ற வார்த்தைகளுடன் அக்னிஜ்வாலையில் குதித்திருக்கும் காந்தியின் ஆணை. இதை மீறுபவர்கள் தெரியாமல் குற்றம் செய்யவில்லை. குற்றம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடனேயே தான் குற்றம் செய்கிருர்கள். நாட்டின் லட்சியமும் ஈடேற அதுவே சிறந்த வழி. இந்த ஒரு வழியைக் கடைப் பிடிப்பதினுல் காங்கிரஸ் தலைவர்களை விடுதலை செய்வதைவிட வேறு ஒன்றும் செய்யமுடியாத நிலைமைக்கு சர்க்கார் வந்துவிடலாம். காங்கிரஸ் தலைவர்களின் விடுதலையைக் கோருகிறவர்களும் சமாதான மகா நாட்டில்

காந்திஜி இந்தியா சார்பில் செல்ல வேண்டு மென்று விரும்புகிறவர்களும், நாடு சுதந்திர மடைய வேண்டுமென்று எதிர் பார்ப்பவர் களுக்கு முள்ள இந்த ஒரே ஒரு வழி காங்கிரஸை இன்னும் ஆதரித்து பலப்படுத்துவது தான்.

இப்படி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக் காத நிலைமையில் முட்டுக்கட்டையைத் தீர்ப்பது தான் எப்படி? அஹிம்ஸா முறையில் நடத்தப் படும் சாத்வீக போராட்டத்திற்கும், அதிகாரங் களையும் அவசரச் சட்டங்களையும் கொண்டு நடத்தப்படும் அடக்கு முறைக்கு மிடையே நடைபெறும் ஒரு பெரிய போரின் முடிவு தான் என்ன? பொது ஜனங்கள் எவ்வளவு நாள் தான் இந்த நிர்க்கதியான நிலைமையில் இருக்க முடியும்? இவைகளுக்கெல்லாம் ஒரே ஒரு பதில் தான். நாட்டில் நிலைமை முற்றி, ஜனங்கள் சகிப்புத்தன்மையை இழந்து, மனதி லுள்ள கொதிப்பு கட்டுக்கு மீறி முடிவில் அராஜகம் ஏற்படப்போகிறது. அந்த நிலைமை ஏற்பட்ட பின் தான் இந்தியா தன் லட்சியத்தை யடையமுடியும். அதுவரை இந்த நெருக்கடி தீர வேறு வழியில்லை. இந்தியாவில் அம்மாதிரி யான நிலைமையேதான் ஏற்படவேண்டு மென்று இருக்குமானல் அதை யார் தடுக்க முடியும்? இம் மாதிரியான நிலைமை ஏற்படும் பட்சத்தில் அது இந்தியாவுக்கு மட்டும் புதிதாக இருக்கமுடியாது. உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டிலும், அராஜகம் ஏற்பட்டே சுதந்திரம் கிடைத்திருக்கிறது.

அமெரிக்கா ஐக்ய நாடுகள், தென் அமெரிக்கா விலுள்ள பல நாடுகள், ரஷ்யா, இதாலி, பிரான்ஸ் எந்த நாட்டைவேண்டுமானுலும் எடுத்துக் கொள்ளலாம். அராஜகம் ஏற்பட்ட பின் தான் விமோசனம் கிடைக்கிறதென்று சரித்திரம் கண்ட உண்மை. இந்தியாவில் நூற்றில் ஒரு பங்கு கூட இராத குட்டி தேசங்களில் இம்மாதிரி அராஜக நிலைமை ஏற்பட்டால் பெரிய வல்லரசுகளுக்கு ஓயாத தலைவலி ஏற்பட்டுவிடு கிறது. அப்படி யிருக்கையில் பெரியதேசமான இந்தியா எவ்வளவு மடங்கு தலைவலிகளைக் கொடுக்கக்கூடு மென்பதை யாரும் யூகித்துக் கொள்ளலாம். தருமபுத்திரர் மற்ற தம்பிமார்கள் துரியோதனனின் கொடுமை பொறுக்க முடி யாமல் சீறி எழுந்த போதெல்லாம் "குறைவொன் றும் வராது. தர்மத்தோடிருப்போர்க்கு பயமேது?" என்று அவர்களை அடக்கி தருமமாகவே நடந்து வந்தார். அப்பேர்ப்பட்ட தருமபுத்திரரும் மகா பாரத யுத்தத்தை நடைபெருமல் தடைசெய்ய முடியவில்லை. சிறையில் தலைவர்கள் இருப்பதனுல் யாரும் கவலைடைய வேண்டியதில்லை. நம்தலைவர் களுக்கு இந்தியா சுகந்திரம் பெருதவரையில் சிறைக்குள் இருப்பதும் ஒன்றுதான் ; சிறைக்கு வெளியில் இருப்பதும் ஒன்றுதான். "இன்னும் அவர்கள் சிறையில எவ்வளவுக் கெவ்வளவு நாள் அதிகம் வைக்கப்பட்டிருக் கிருர்களோ அவ்வளவுக் கவ்வளவு அவர்களிடம் ஜனங்களின் அபிமானம் அதிகரித்து விடுமே! இந்தத் தவறை

பிரிட்டிஷார் தெரிந்துக்கொள்ளாமல் இருக்கிறுர்களே" என்று சிமன்லால்செதல்வாட் கூறுகிறுர்.

பிரிட்டிஷாரின் பிடிவாதமும் சண்டித்தனமும் அதிகரிக்க அதிகரிக்க காங்கிரஸின் பலமும் அதிகரித்துக்கொண்டே வருகிறது என்பது யாரும் மறுக்க முடியாத உண்மை இந்த பலத்தை காங்கிரஸ் எவ்வளவோ தியாகங்கள் செய்து வளர்த்திருக்கிறது. எவ்வளவோ பாரதபுத்திரர்கள் தடியடிபட்டு உடல் நொருங்கி ஆவிகுன்றி உயிரை விட்டிருக்கிறுர்கள். தன்னலம் எதுவுமின்றி சிறையிலேயே வாழ்நாளில் பெரும் பாகத்தை செலவிட்டவர்கள் எவ்வளவோபேர். உண்ணுவிரதமிருந்து உயிர்நீத்தவர் பலர். தேசத்திற்காக தங்கள் உடல் பொருள் ஆவி இவைகளை ஒரு திரணமாக மதித்து நம் தலைவர்கள் செய்துள்ள தியாகத்தினுல் சேர்ந்துள்ள பலமே இன்று காங்கிரஸ் பெற்றிருக்கிறது. இவ்வளவும் போதாதென்று இன்னும் எவ்வளவு தியாகங்கள் கஷ்டங்கள் நம்மை எதிர் நோக்கியிருக்கின்றனவோ? நம் முன்புள்ள ஒரே ஒரு காரியம் காங்கிரஸை இன்னும் பலப்படுத்துவதேதான். இதுவரை காங்கிரஸ் பலம் பெற்றிருப்பது போதாது. இனிமேற் கொண்டுதான் காங்கிரஸிற்கு வேண்டிய பலத்தை அளிக்க வேண்டியதும் நம் கடமை. நெருக்கடிதீர நாம் காங்கிரஸை பலப்படுத்துவதென்பதே சிறந்த வழி. சிறையின் பூட்டை உடைத்துத் தலைவர்களை விடுதலை செய்வதற்கும் அதுவே வழி.

கதம்பம்

[தமிழ் டைஜஸ்ட்]

மாத வெளியீடு :: விலை அணா பத்து

முதல் புத்தகத்தில்

நாமக்கல் கவிஞர்
ராஜாஜி
கல்கி
என். ராமரத்னம்
வ. ரா.
“சாவி”
“மல்லிகா”
“பாண்டியன்”
ஜோத் செங்கோ

முதலியவர்களின் சிறந்த கட்டுரைகளும் கதைகளும் நமது சித்திரக்காரர் “ராவ்” அவர்களின் படங்களும் வெளியாகி யிருக்கின்றன.

மானேஜர்:

கதம்பம், தியாகராயநகர், சென்னை

Cover Printed at P. A. S Press, Mount Road, Madras

தென்னாட்டின் தலை சிறந்த
நகை வியாபாரிகள்
M.S. DORAI.
பி.ஏ.ராஜு செட்டியார் & பிரதர்
கோயமுத்தூர்
போன் : 218-A
தந்தி : "ராஜா"
Post Box 139